# தமிழரசு

ஜூலை 1-15, 1997 ரூ.3






# இந்த இதழில்...


☆ 'நமக்கு நாமே' - திட்டம் தொடக்கம் ... 2

☆ கால்நடைப் பராமரிப்பு ... 9
- **டாக்டர் டி.எபிநேசர்,** இயக்குநர்,
கால்நடைப் பராமரிப்புத்துறை.

☆ கிராமிய இயக்கத்தால் வளரும் தமிழ் ... 17
- முனைவர் **கே.ஏ. குணசேகரன்**

☆ சிப்பாய் சின்னத்தம்பி - மாணவர் பக்கம் ... 27
- சாமகோடாங்கி **சங்கரலிங்கம்**

☆ நேசம் - கவிதை ... 31

☆ கோழை! ... 33
- கவிஞர் **கண்ணதாசன்**

☆ எங்கள் ஊர் பிரச்சினை ... 37

☆ அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ... 42



**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2028
மலர் : 28 இதழ் : 1
ஜூலை 1-15, 1997
விலை ரூ.3

நமக்கு நாமே திட்டத்தினுடைய நோக்கம் - ஊராட்சி சாலைகள், ஏரி, குளம் தூர் வாருதல், சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், மயான வசதி, இணைப்புச் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஒவ்வொரு கிராமமும், அரசு அளிக்கும் நிதியைக் கொண்டு, அந்தந்தக் கிராம மக்கள் தங்கள் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட திட்டத்தைச் செம்மையுற நிறைவேற்றுவதேயாகும்.

## அரசு அளிக்கும் நிதியுதவியோடு

## கிராம மக்கள் ஒத்துழைப்போடு

# 'நமக்கு நாமே' திட்டம்!

## விண்ணமங்கலம் தென்னந்தோப்பில்

## முதல்வர் கலைஞர் தொடங்கிவைத்தார்!

விண்ணமங்கலத்தில் 'நமக்கு நாமே' திட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இங்கே இந்த நிகழ்ச்சியைப் பார்க்கும் பொழுது மகாகவி பாரதி பாடிய பாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. "காணி நிலம் வேண்டும்; பராசக்தி காணி நிலம் வேண்டும்; அங்கு பத்துப் பனிரெண்டு தென்னை மரம் வேண்டும். அங்கே கத்தும் குயில் ஓசை கேட்க வேண்டும்" என்று பாரதி பாடினார்.

அந்தக் காட்சி உங்களை எல்லாம் பார்க்கும்பொழுது, இந்தத் தென்னை மரங்களை எல்லாம் பார்க்கும்பொழுது என் கண்முன்னால் நிற்கிறது. அங்கே குயிலின் ஓசை கேட்க வேண்டும் என்று அவர் சொன்னார். இங்கே கோரிக்கை ஓசை தான் கேட்டுக் கொண்டிருக்கிறது.

### அன்பும் பாசமும்

நான் கிராமத்திலே பிறந்தவன். தஞ்சை மாவட்டத்தில் – திருக்குவளை என்ற கிராமத்தில் பிறந்தவன். அதைப் போல இங்கே பேசிய தம்பி முரசொலிமாறன் கிராமத்திலே பிறந்தவர் - அதே திருக்குவளையில்!

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருக்கின்ற உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் மேக்கிரிமங்கலம் என்ற கிராமத்தில் பிறந்தவர். அதைப்போல நம்முடைய ஆர்க்காடு வீராசாமி அவர்கள் குப்படிச்சாத்தம் என்ற கிராமத்திலே பிறந்தவர். நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகன் 'மேல் மாயில்' என்ற கிராமத்தில் பிறந்திருக்க வேண்டியவர் - பக்கத்தில் அவருடைய மாமனார் வீட்டில் இன்னொரு கிராமத்தில் பிறந்தவர்.

எனவே நாங்கள் எல்லாம் எந்த அளவிற்குக் கிராம மக்களிடத்திலே அன்பும் பாசமும் கொண்டிருப்போம் என்பதை எங்களுடைய பிறப்பிலிருந்தே - எங்கே பிறந்தோம் என்பதில் இருந்தே நீங்களெல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

எனக்குள்ள ஆசை எல்லாம் நாம் கிராமத்திலே பிறந்தோம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து அரசியலிலே பங்கேற்று கிராமப் புறத்திலே இருந்து நகர்ப் புறத்திலே உள்ள கல்விக் கூடத்திலே படித்து படிப்பை முடித்துவிட்டு நகரவாசியாகிவிட்டோம்.

### கிராமங்களை நகரங்களாக்க வேண்டும்





கிராமங்களிலே கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நகரத்துக்கு வந்தால் நகரவாசியாகவா ஆக முடியும்? முடியாது. எனவே கிராமங்களை எல்லாம் நகரங்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய திட்டம்.

அதற்காகவே, இன்று காலையிலே- தமிழகத்திலே, முதன்முதலாக அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால், "அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமம்" என்ற அந்தத் திட்டத்தை இந்த மாவட்டத்தில் பொன்னை என்ற ஊரில் தொடங்கியிருக்கிறோம்.

**திட்டத்தின் குறிக்கோள்**

இங்கே துவங்கப்படும் இந்தத் திட்டத்திற்குப் பெயர் "நமக்கு நாமே" திட்டம். நமக்கு நாமே திட்டத்தின் நோக்கம் ஊராட்சி சாலைகளைச் செப்பனிடுதல், ஏரி, குளம் தூர் வாருதல், சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், மயான வசதி, இணைப்புச் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஒவ்வொரு கிராமமும் அரசு அளிக்கும் நிதியைக் கொண்டு அந்தந்தக் கிராம மக்களுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றுவது தான் "நமக்கு நாமே" திட்டம் ஆகும்.

பொதுவாக - குழந்தையாக இருக்கும்பொழுது தான் தாய் தன் குழந்தையைக் குளிப்பாட்டி சட்டை அணிவித்து தலைவாரிப் பூச்சூடி "பாட சாலைக்குப் போ" என்று சொல்கிறாள் அன்னை என்பது நமக்குத் தெரியும். அதுவரையில் தாயின் தயவு வேண்டியிருக்கிறது. ஒரு குழந்தை குளிக்க, சாப்பிட, பள்ளிக்கு அனுப்பப்பட தாயின் தயவு வேண்டியிருக்கிறது. பிறகு அந்தக் குழந்தை தாயாகவோ அல்லது தந்தையாகவோ மாறிவிட்ட நிலையில் அதனுடைய பணிகளை அதுவேதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தலைசீவிக் கொள்கிறோம். இன்னொருவர் வந்தா சீவி விடுகிறார்கள்? சில நேரங்களில் காதலர்கள் வேண்டுமானால் ஒருவருக் கொருவர் தலை சீவிக் கொள்ளலாம். ஆனால் பொதுவாக அவரவர்கள் வேலையை அவரவர்கள்தான் பார்த்துக் கொள்கிறோம். நாம், நம்முடைய வேட்டியை நாமேதான் கட்டிக் கொள்கிறோம். இன்னொருவர் வந்து கட்டி விடுவதில்லை. நம்முடைய புடவையை நாமே தான் கட்டிக்கொள்கிறோம். இன்னொருவர் வந்து கட்டி விடுவதில்லை.

**எனக்கு நானே அல்ல; 'நமக்கு நாமே!'**

அதைப் போல மனிதர்கள் அவரவர்கள் வேலையை அவரவர்கள் செய்து கொள்வதைப்போல - ஒரு மனிதர் தன் வேலையை எப்படி தானே கவனித்துக் கொள்கிறாரோ, அதைப்போலப் பல மனிதர்கள் வாழ்கின்ற ஒரு பகுதியில் - அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் அனைவரும் அந்தப் பகுதிகளின் பணிகளில் பங்கேற்று அந்தப் பணியை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். அதுதான் 'நமக்கு நாமே'.

ஒருவர் மாத்திரம் செய்து கொண்டால் அது 'எனக்கு நானே', இது 'நமக்கு நாமே'. நாமெல்லாம் செய்து கொள்கின்ற பணிக்குப் பெயர்தான் 'நமக்கு நாமே'.

எனவே 'எனக்கு நானே' என்பதற்குப் பதிலாக 'நமக்கு நாமே' - நாமே நம்முடைய காரியங்களை, வேலைகளை, அலுவல்களை எல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே நாம் குழுமியிருக்கின்றோம்.

கிராமங்களில் முன்னேற்றம் இருந்தால்தான் நகரம்

உருவாகும். பிறகு நகரம் வளம் பெறும். நாடு வாழும்.

இங்கே நடக்கின்ற இந்தக் கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருக்கின்றீர்கள். இது இந்த மாவட்டத்தில் நான் தொடங்கி வைக்கின்ற 'நமக்கு நாமே' திட்டமாகும். இதைத் தொடர்ந்து இந்த மாவட்டத்தில் நம்முடைய அமைச்சர்கள், அமைச்சர்கள் வர இயலாத நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்கள் வர இயலாத நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக் கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், இவர்கள் எல்லாம் கூட, ஒவ்வொரு ஊரிலும் இருக்கின்ற வாக்காளப் பெருமக்கள் கூடியதுதான் இந்தச் சபை.

## 'காப்பி'யடித்த முறையல்ல!

தம்பி மாறன் குடவோலை முறை பற்றிப் பேசும்போது, இதையெல்லாம் நாம் யாரையோ பார்த்துக் காப்பி அடித்திருப்பதாக - யாரோ எழுதியிருப்பதாகத் தெரிவித்தார். அவரே சொன்னதைப் போல, இந்த சபை 1200 ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய தமிழகத்திலே கூடிய சபைதான். யாரும் காப்பி அடிக்க வில்லை. காப்பி அடித்தால், தமிழனுடைய முறையைத் தமிழன் காப்பி அடித்திருக்கிறான் என்பதைத் தவிர - வேறு எவனுடைய முறையையும் நான் காப்பியடித்து விடவில்லை.

உத்திரமேரூர் கல்வெட்டைப் பற்றி மாறன் இங்கே சொன்னார். அந்த உத்திரமேரூர் கல்வெட்டின் சிறப்பு நம்முடைய தமிழகத்தின் மக்களாட்சி மாண்பினை எடுத்துக்காட்டுகிற சிறப்பாகும். அதிலே எப்படி வாக்குகளைப் போடுகிறார்கள் என்றுகூட சொன்னார்.

ஒருவர் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்றால், அவர்கள் என்னென்ன குணம் உடையவர்களாக இருக்க வேண்டும்? என்னென்ன குணம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்? - என்றெல்லாம் பார்த்து; இவர்கள் நாணயமானவர்களா? நேர்மையானவர்களா? நிர்வாகத்தை நடத்தக்கூடிய ஆற்றல் படைத்தவர்களா? என்றெல்லாம் பார்த்துத்தான் தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள் கையூட்டு - கையூட்டு என்றால் லஞ்சம் பெற்றவர்களா? அல்லது பெறக் கூடியவர்களா? இவர்கள் பெறாவிட்டால் இவர்களின் உறவினர்கள் அப்படிப் பட்டவர்களா என்றெல்லாம் பார்த்துத்தான் அன்றைக்குத் தேர்தலிலே வாக்களித்தார்கள். என்றைக்கு? 1200 ஆண்டுகளுக்கு முன்பு!




அப்பொழுதே நம்முடைய தமிழர்கள், அவ்வளவு நேர்மையிலே, நாணயத்திலே அக்கறை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். பனை ஓலையிலே பெயரை எழுதிப்போடுவார்கள். அதை இலக்கியம் எல்லாம் சொல்வதாக மாறன் குறிப்பிட்டார். அதை எப்படி இலக்கியம் குறிப்பிடுகிறது தெரியுமா?

## இலக்கியக் காட்சி

ஒரு போர்க்களத்தைக் கடந்து ஒரு புலவன் போகிறான். அந்தப் போர்க்களத்தில் பல பேர் மாண்டு கிடக்கிறார்கள். சண்டை முடிந்த பிறகு, மாண்டு கிடக்கின்ற அந்தப் பிணங்களைக் கழுகுகள் கொத்திக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு கழுகு மாண்டு கிடக்கிற ஒரு வீரனின் குடலைப் பிடுங்கி, அந்தக் குடலை உருவித் தின்று கொண்டிருக்கிறது.

அதைப் பார்க்கின்ற அந்தப் புலவன், என்ன சொல்லிப் பாடுகிறான் தெரியுமா? இந்தக் கழுகு களத்திலே செத்துக் கிடக்கிற இந்த வீரனின் குடலைப் பிடுங்கிச் சாப்பிடுவது எப்படி இருக்கிறது என்றால், ஊராட்சித் தேர்தலில், குடத்திலே போடப்பட்ட வாக்குச் சீட்டுகளாக இருக்கிற பனை ஓலைகளை - ஒவ்வொன்றாக உருவி எடுத்து எண்ணிப் பார்ப்பதைப்போல



இந்தக் குடலை அந்தக் கழுகு உருவுவது இருக்கிறது என்று உவமை கூறிப் பாடுகிறான்.

இதிலிருந்தே சங்ககாலம் – ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம்; அந்தக் காலத்திலேயே நம்முடைய ஊராட்சிகளில் நமக்குத் தேவையான தலைவர்களை, நம்முடைய பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அப்படிப்பட்டவர்கள் அன்றைக்குக் கூடி, தங்கள் ஊர்த் தேவைகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லி – அதை அவர்களாகவே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் - அரசின் துணையோடு! இன்றைக்கு நாங்கள் இங்கே வந்திருப்பதும் "நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கத் தயாராக வந்திருக்கிறோம். நீங்கள் உங்களுடைய ஒத்துழைப்பைத் தாருங்கள்'' என்பதற்காகத்தான். நிதி வேண்டுமா? அரசு தரத் தயாராக இருக்கிறது. ஒரு கட்டடம் கட்ட சிமெண்ட் வேண்டுமா? செங்கல் வேண்டுமா? இங்கே எடுத்துச் சொன்னார்கள். ''செங்கல் வேண்டும்; சிமெண்ட் வேண்டும்'' என்று. அதையும் தரத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் இவைகள் எல்லாம் இன்னொரு கூலியாளை விட்டு அது ஒழுங்காக இருக்கிறதா என்று பார்ப்பதைவிட நாமே அந்தச் செங்கல்லை அடுக்கி, நாமே அந்தக் கட்டடத்தைக் கட்டி - நாம் ஒழுங்காகத் தான் கட்டினோம் என்று நெஞ்சை நிமிர்த்தி நீங்கள் காட்டுவீர்களேயானால் - அது உங்களுக்கும் பெருமை, ஊருக்கும் பெருமை, இதை எடுத்து உங்களுக்குச் சொன்ன எனக்கும் பெருமை. எனவே அந்தப் பெருமையை நான் பெற வேண்டும். இதற்குப் பெயர்தான் 'நமக்கு நாமே' திட்டமாகும்.

### அன்போடும் ஆதரவோடும்...

என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்கு இங்கே நீங்கள் இங்கே எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள்; ஏற்கெனவே இந்த விண்ண மங்கலம் ஏரி பற்றி நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் என்னிடம் குறிப்பிட்டார்; இதைத் தூர் வாருகிற பணி தொடங்கப்பட்டு நடை பெற்றிருக்கிறது. இதிலே - வரத்துக் கால்வாயிலே தூர் வார வேண்டிய வேலை தொடர்ந்து நடக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பணியை நான் இன்றைக்கு உங்களின் அன்போடும் ஆதரவோடும் செய்ய இருக்கின்றேன் - தொடங்கி வைக்க இருக்கின்றேன்.

இப்படி சீரமைக்கும் பணியை இலவசமாகச் செய்து கொடுப்போம் என்று ஊர்ப் பொது மக்கள் கூறியிருக்கிறார்கள். வீடுகளுக்கு ஒரு மரக்கன்று கொடுத்தால், நாங்கள் குழிவெட்டி நட்டு வளர்த்துக் கொள்வோம். டி.வி.ரூம் கட்டிக் கொடுத்தால் - மணிவேல் 5000 கல் உதவி செய்கிறார். வின்ஸ்டர் கிரிக்கெட் குழுவின் சார்பாக 5000 கல் தருகிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு முன் வந்தால் இளைஞர் நற்பணி மன்றத்தார் இலவசமாகப் பணியாற்றுவதாகக் கூறி இருக்கிறார்கள்.

அப்படிப் பணியாற்றுவதாகச் சொன்ன அந்த இளைஞர்களை எல்லாம் இப்பொழுதே நான் அவர்கள் முதுகிலே தட்டிக் கொடுக்கிறேன் - அவர்கள் உச்சிமோந்து பாராட்டுகிறேன் - வாழ்த்துகின்றேன். இளைஞர்கள் இப்படித்தான் வளர வேண்டும். இதை விட்டுவிட்டு "ராக் அண்டு ரோல்'' ஆடிக் கொண்டிருக்கக் கூடாது. அதிலே தங்களின் கவனத்தைச் செலுத்தக் கூடாது.

அதைப் பொழுதுபோக்காக என்றைக்காவது பார்க்கலாம்.

எதைப் பார்த்தாலும் எதைக் கண்டாலும் நாம் இந்தச் சமுதாயத்திற்காக என்ன பணியாற்றினோம் என்பதை ஒவ்வொரு இளைஞனும் தனக்குத் தானே கேட்டுக்கொண்டு ஊராரோடு கூடி அரசின் உதவியைப் பெற்று இதுபோன்ற சமுதாயப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று நான் அவர்களை எல்லாம் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த ஒரு கிராமம் மாத்திரமல்ல; 12,600 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்த 12,600 பஞ்சாயத்துக்களிலும் இன்று போல கூட்டங்கள் நடைபெற வேண்டும்.

இன்னும் மூன்று மாதத்திற்குப் பிறகு நீங்கள் கூட வேண்டும். நானே வரவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இவ்வளவு பெரிய தென்னந்தோப்பில் கூட வேண்டும் என்றில்லை; சாவடியில் கூடலாம். ஒரு மரத்தின் நிழலிலேகூட சுமார் 100 பேர், 200 பேர் கூடலாம். கூடி, உங்கள் கோரிக்கைகளை எல்லாம், பஞ்சாயத்து யூனியன் தலைவரோடு, ஊராட்சிமன்றத் தலைவரோடு, உள்ளாட்சி மன்றத் தலைவர்களோடு, அதிகாரிகளோடு தேவைப் படுகிற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரோ டெல்லாம் நீங்கள் கலந்து பேசி உங்களின் தேவைகளை எடுத்துச் சொல்லி அவ்வப்பொழுது அந்தப் பணியை நிறை வேற்றிக் கொள்ள வேண்டும்.

இது இங்கு மாத்திரமல்ல; தமிழ்நாட்டில் உள்ள 12,600 பஞ்சாயத்துக்களிலும் இந்த



ஊர்ப் பொதுச் சபை, ஊர் மன்றம், ஊர் மக்களின் மன்றம் உங்கள் தேவைகளை எடுத்துச் சொல்ல அவைகள் கவனிக்கப்பட இருக்கின்றன. இது தமிழ்நாட்டின் பொற்காலம் தொடங்குகிறது என்பதற்குச் சான்று. ஏற்கெனவே தொடங்கி விட்டது.

**பொற்காலமும் கற்காலமும்**

1967ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் முதலமைச்சரான போதே பொற்காலம் தொடங்கியது. இடையிடையே கற்காலமும் வந்து போனது. இருந்தாலும்கூட இப்பொழுது மீண்டும் அந்தப் பொற்காலம் உங்களால் உருவாக்கப் பட்டிருக்கிறது.

ஜனநாயகத்திலே நம்முடைய மக்களுடைய - கிராமப்புறத்து மக்களுடைய - ஏன், நகர்ப்புறத்து மக்களாக இருந்தாலும் எந்த மக்களாக இருந்தாலும் அவர்களுடைய அடிப்படை வசதிகள்தான் இன்றைக்கு முக்கியம். ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவை அடிப்படை வசதி, சுகாதாரம், கல்வி, குடிதண்ணீர் வசதி, நல்ல சாலை - இங்கே கேட்டார்களே போக்குவரத்து வசதி; அவைகள் எல்லாம் முக்கியமானவை.

"நான்கு பஸ் ஓடுகிறது. பத்து பஸ் வேண்டும்'' என்று சொன்னார்கள். இருந்த பஸ் எல்லாம் எங்கே போனது என்று உங்களுக்குத் தெரியும். மிச்சமிருக்கிற சில பஸ்களையும் சில வன்முறையாளர்கள் கொளுத்தி கும்மாளம் போட்டுவிடுகிறார்கள். இதை எல்லாம் மீறி பஸ்கள் ஓட வேண்டியிருக்கிறது. "ஒரு 5000 பஸ் இப்பொழுது வாங்குவதற்கு இந்த அரசு திட்டமிட்டு அதிலே கிட்டத்தட்ட 2000 பஸ் வரை வாங்கப்பட்டாகி விட்டது. மிச்சமுள்ள 3000 பஸ்கள் வாங்குகிற நேரத்தில் இங்கே

வைக்கப்பட்ட கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

டி.வி. ரூம் கட்டிக் கொடுக்க நீங்களே முன்வருவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். நன்றி கூறிக் கொள்கின்றேன். அதற்குக் கல்லும் தருவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். நன்றி கூறிக் கொள்கின்றேன். அதைப்போலவே மயானத்திற்கு நிலம் மற்றும் பாதை இவைகளைச் சீர் செய்யவும் - இவைகளை உருவாக்கவும் நீங்கள் உங்களின் ஒத்துழைப்பை, உழைப்பை நல்குவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அதையும் நான் பாராட்டுகின்றேன். இன்னும் அடிக்கடி நடைபெறுகின்ற இந்தக் கூட்டங்களில் எல்லாம் உங்களுடைய தேவைகளை எடுத்து வைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் ஒரு கிராமவாசி என்கிற முறையில் - இன்றைக்கு நகரவாசியாக இருந்தாலும்கூட, நான் எல்லோருக்கும் இன்றைக்குப் பொதுவானவன். நகரத்திலே உள்ளவர்களுக்கும், கிராமத்திலே உள்ளவர்களுக்கும் பொதுவானவன். இந்த நிலைமை இன்றைக்கு ஏன் ஏற்பட்டிருக்கிறது? இன்னொன்று: அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தந்தை பெரியார் அவர்கள் அப்பொழுது நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார். என்ன தீர்மானம் தெரியுமா? இப்பொழுது யாரும் கொண்டு வந்து விடவில்லை. எல்லோரும் நம்மைப் பார்த்துத்தான் காப்பி அடிக்கிறார்கள்.

## சட்டம் போட்டேன்

பெரியார் அன்றைக்குச் செங்கற்பட்டில் சுயமரியாதை மாநாட்டில் 1929ஆம் ஆண்டில் "பெண்களுக்கும் ஆண்களைப் போல் சொத்தில் சம உரிமை வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வந்தார். இந்த அறுபது ஆண்டுக் காலத்தில் யாராவது நிறைவேற்றினார்களா? இல்லை. 1989ஆம் ஆண்டு, நான் முதலமைச்சராக இருந்தபொழுது, சட்டப்பேரவையில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, பெண்களுக்கும் அவர் களுடைய குடும்பச் சொத்திலே ஆண்களைப் போலப் பாதி உரிமை உண்டு என்கின்ற தீர்மானத்தை, சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அன்றைக்குச் சொன்னேன்; "அய்யா பெரியார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்தை இன்றைக்குச் சட்டமாக, ஆக்கியிருக்கிறேன்" என்று.

அது மாத்திரமல்ல; அதன் தொடர்ச்சியாக, இந்த உள்ளாட்சிமன்றத் தேர்தலில் 33 சதவிகிதம் பெண்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டது.

ஒரு பழமொழி சொல்வார்கள்; "முகமது மலைக்கு வரவேண்டும்; இல்லாவிட்டால் மலை முகமதுவிடம் வரும்" என்று சொல்வார்கள். அதுதான் இன்றைக்கு நடக்கின்றது. அதிகாரிகள் உங்களைத் தேடி வருவார்கள்.

இதைத்தான் மனுநீதித் திட்டமாக நான் ஆரம்பித்தேன். 1969-இல் அண்ணா மறைந்த பிறகு, நான் பொறுப்பேற்ற நேரத்தில், மனுக்களை உங்களிடத்திலே பெற அதிகாரிகள் வருவது "Spot Decision" - அந்த இடத்திலேயே முடிவெடுப்பது. எதுஎது முடியும், எதுஎது முடியாது என்று சொல்வது, இதுதான் மனுநீதித் திட்டம். மனுநீதிச் சோழன் திட்டம் அல்ல; மனுவை வாங்கி நீதி வழங்குகின்ற திட்டம் - மனு நீதித் திட்டம். அந்த மனுநீதித் திட்டத்தை அன்றைக்குத் தொடங்கி, அதிகாரிகளை உங்களிடம் அனுப்பி உங்களின் கோரிக்கைகளைத் தெரிவிக்கச் சொன்ன ஆட்சிதான் இந்த ஆட்சி'.

## கட்டளையிடுங்கள்

எனவே நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்; கிறித்துவத்திலே "தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் இந்த ஆட்சியில் தட்டாமலே திறக்கப்படும். கேட்காமலே கொடுக்கப்படும் என்று இருந்தாலும் கூட, உங்கள் மனதிலே என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் கேட்கிறோம்; இருப்பதை அடிக்கடி சொல்லுங்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி சொல்லுங்கள்.

எங்களுடைய ஆட்சியின் அதிகாரிகள், பிரதிநிதிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், உள்ளாட்சியில் உள்ள பிரதிநிதிகள் அனைவரும் அதைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

நீங்கள் காலால் கட்டளையிடுங்கள். நாங்கள் தலையால் செய்து முடிக்கிறோம்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ❑

# மக்கள் குறையை மக்களே தீர்க்கும் 'நமக்கு நாமே' திட்டத் தொடக்க விழா

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் உள்ள மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த விண்ணமங்கலத்தில் 26.6.97 அன்று மாலை "நமக்கு நாமே" திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கிவைத்தார்.

இந்தத் திட்டத்தின் துவக்க விழா, வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், சென்னை-பெங்களூர் சாலையின் வலது புறம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு பெரிய தென்னந்தோப்பில், விண்ணமங்கலம் மற்றும் வட்டார கிராம மக்களின் முன்னிலையில் நடைபெற்றது. மஞ்சள் வெயில் மாலையிலே நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு மேடையோ, பந்தலோ எதுவும் அமைக்கப்படவில்லை. மிக எளிமையாக தென்னந் தோப்பில் நடைபெற்றது.

முதல்வர் கலைஞர் அவர்கள் அந்த ஒரு பெரும் கூட்டத்தில் மக்களோடு மக்களாக அமர்ந்து, மக்களின் குறைகளை நேரிலேயே கேட்டறிந்தார்.

அக்கூட்டத்தில் அமர்ந்திருந்த பொதுமக்களிடமே தங்களின் குறைகளைக் கூறுமாறு முதல்வர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

அதன்படி குடிநீர் வசதி, தொகுப்பு வீடுகள், ஏரிகள் தூர்வாரல், சமுதாயக் கிணறு, பால் உற்பத்தியாளர் சங்கம், தொலைக்காட்சி அறை, பள்ளிக்கு வெள்ளை அடித்தல், மயான வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மணி, ஊர்ப் பிரமுகர் மூர்த்தி, ஆதிதிராவிட கிராமப் பஞ்சாயத்துத் தலைவர், சி.ராமலிங்கம் மற்றும் பொதுமக்களில் பலர் பேசினார்கள்.

இதையடுத்து ஊர் மக்கள் அந்தக் கோரிக்கைகளைச் செயல்படுத்த முன்வந்து, பள்ளிக்கூடத்திற்கு வெள்ளையடிக்க அரசு சுண்ணாம்பு வாங்கிக் கொடுத்தால் போதும்; வெள்ளையடிக்கும் பணிகளை நாங்களே செய்துகொள்கிறோம் என்றும் கூறினர்.

அதேபோல் ஏரிகளைத் தூர்வாரும் பணியில் கிரிக்கெட் கிளப்பைச்சேர்ந்த இளைஞர்கள் தினசரி 50 பேர் ஈடுபட்டிருக்கிறோம் என்றும் அந்தக் கூட்டத்தில் அறிவித்தனர்.

தொலைக்காட்சி அறை கட்டுவதற்கு 5 ஆயிரம் செங்கற்களைப் பொதுமக்களே தர முன்வந்தனர். இதேபோல் அந்த ஊர் மக்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளத் தாங்களே முன்வருவது குறித்தும் கூட்டத்தில் அறிவித்தனர்.

நிறைவாக உரையாற்றிய முதல்வர் கலைஞர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, பொதுமக்களின் ஒத்துழைப்புக்கு நன்றி கூறினார்.



இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், ஏரியில் தூர்வாரும் பணியினை - தலைப்பாகை கட்டிக்கொண்டு கடப்பாரையால் இடித்து மண்வெட்டியால் மண்வாரித் தந்து துவக்கி வைத்தார். தென்னங்கன்று நட்டார். கிராம மக்களுக்குத் தென்னங்கன்றுகள் - செடிகள் வழங்கினார்.

சத்துணவுக்கூடத்திற்கு வெள்ளையடிக்கும் பணியினையும் முதல்வர் கலைஞர் அவர்கள் தம் துணைவியாருடன் துவக்கி வைத்தார்.

இந்த விழாவில், ஊராட்சித் தலைவர் திரு.சம்பத் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தலைமை வகித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.வி.ச.டேவிதார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மத்தியத் தொழில் அமைச்சர் திரு.முரசொலிமாறன், வாணியம்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஏ.லத்தீப் ஆகியோர் பேசினர்.

நிறைவாக - தம் குடும்பத்தாருடன் இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த முதல்வர் கலைஞர் அவர்கள், பொது மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு திட்டங்களைச் செயல்படுத்த உத்தரவிட்டதோடு, திட்டங்களைச் செயல்படுத்த ஒத்துழைத்த பொதுமக்களுக்கு நன்றியையும் தெரிவித்து உரையாற்றினார்.

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் நடைபெற்ற இவ்விழாக்கள் இரண்டினுக்கும் - மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.கே.பிச்சாண்டி அவர்களும், மாவட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற – உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்களும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் வருகைதந்து சிறப்பித்தார்கள். ★



# கால்நடைப் பராமரிப்பு

**டாக்டர் டி. எபிநேசர்**
*இயக்குநர்*
*கால்நடைப் பராமரிப்புத்துறை*

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு -குறிப்பாக ஏழை மக்களுக்குக் கால்நடை வளர்ப்பு அவர்களின் முன்னேற்றத்திற்கு ஒரு உபதொழிலாக அமைகிறது; அத்துடன் வேலைவாய்ப்பும், வருவாயும் கிட்ட ஏதுவாகிறது. குடும்ப உணவின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், மீதமுள்ளவைகள் விற்பனையாக்கப்படுகிறது. அநேகமாகக் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் கால்நடைகளையோ, கோழிகளையோ வளர்த்துவருகின்றனர்.

நல்ல உயரினதரம் வாய்ந்த வம்சாவழிக் கால்நடைகளின் பெருக்கம், சீரிய முறையிலான மேலாண்மை, சத்து மிகுந்த தீவன உற்பத்தி, உடல்நலம் பேணுதல், நோய்க் கட்டுப்பாடு மற்றும் நோய்களைப் பற்றிய தீவிர கண்காணிப்பு ஆகிய பணிகளைக் கால்நடை பராமரிப்புத்துறை முறையாகக் கையாண்டதால், தனி மாட்டின் பால் உற்பத்தி திறன் கோழிகளின் முட்டையிடும் திறன், இறைச்சி உற்பத்தி ஆகியவை அதிகரித்துள்ளன.

கலப்பினக் கன்றுகள் உற்பத்தி மற்றும் அதற்குத் தேவையான மற்ற அபிவிருத்திப் பணிகளினாலும் மாநிலத்தில் தொடர்ந்து பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

கால்நடைகளின் வாயிலாகக் கிடைக்கும் உணவுப்பொருட்களின் அளவு அதிகரித்துள்ளதால், தனி நபருக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவும் கணிசமாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள **893** கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் **2,126** கிளை நிலையங்கள் மூலமாகக் கால்நடைகளின் உடல்நலம் பாதுகாக்கப் படுகிறது. நோய் நீக்கப்பணி மற்றும் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளுவதால், கால்நடைகளின் உடல்நலத்தைக் காப்பதுடன் கால்நடைகளின் இனவிருத்தி தொடர்பான பணிகள் இந்நிலையங்களில் கவனிக்கப்படுகின்றன.

<u>கால்நடை மருத்துவ நிலையங்களின் விவரம்:</u>

| | | |
|---|---|---|
| ★ | பன்முக மருத்துவமனைகள் | 3 |
| ★ | பெரும் மருத்துவமனைகள் | 21 |

| | | |
|---|---|---|
| ★ | கால்நடை மருத்துவமனைகள் | 104 |
| ★ | கால்நடை மருந்தகங்கள் | 765 |
| | மொத்தம் | 893 |

சென்னை சைதாப்பேட்டை, மதுரை-தல்லாகுளம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 பன்முக மருத்துவமனைகளில் கால்நடைகளுக்குச் சிகிச்சை வசதி 24 மணிநேரமும் செய்யப்பட்டிருக்கிறது. உள்நோயாளிகள் பிரிவு வசதி மேற்கண்ட பன்முக மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம் மருத்துவமனையில் பெரிய அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர சேலம், மதுரை, ஈரோடு, பொள்ளாச்சி, சைதாப்பேட்டை (சென்னை) வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நிலையங்களில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன.

இத்துறையானது கால்நடை வளர்ச்சிக்காகவும், ஏழை மக்கள் மற்றும் பழங்குடியினர் நலன் கருதியும் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

## கறவை மாடுகள் பராமரிப்புத் திட்டங்கள்:

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையினரால் 1976ஆம் ஆண்டு முதல் சேலம், தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர், வடார்க்காடு அம்பேத்கர், திருச்சி பெரும்பிடுகு, விழுப்புரம் இராமசாமி படையாட்சியர் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது சேலம் மாவட்டத்தில் மலைப்பகுதிகளான ஏர்க்காடு, கொல்லிமலை, கல்வராயன்மலை, பச்சைமலை, அருநூத்துமலை ஆகிய மலைப்பகுதிகள், தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி, திருவண்ணமாலை சம்புவராயர் மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதி, வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் ஏலகிரி மற்றும் திருச்சி மாவட்டத்தில் பச்சைமலை ஆகிய மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினரின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்துடனும், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலை பழங்குடியினர் பயனாளிகளுக்கு 75% மான்யத்துடன் கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டமானது நிலமற்ற மற்றும் சிறு விவசாயிகள், தங்களது வறுமைக்கோட்டிலிருந்து மேம்பட்டு வாழவும், கால்நடை வளர்ப்பின் மூலம் உபரி வருமானத்தை ஈட்டவும் வழிவகை செய்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 300 அலகுகள் (ஒரு அலகுக்கு 2 மாடுகள் வீதம்) கறவைப் பசுக்கள் பழங்குடியினர் பயனாளிகளுக்கு 1996-97ஆம் ஆண்டில் வழங்க ரூ.23.92 இலட்சம் அரசு நிதி இசைவாணை வழங்கியுள்ளது. ஒரு அலகுக்கு ரூ.12,000 மதிப்பில் இரு கறவைமாடுகள் 6 மாத இடைவெளியில் வழங்கப்படுகிறது. இத்தொகை பழங்குடியினப் பயனாளிகளுக்கு மான்யம் வழங்கவும், 5 விழுக்காடு காப்பீட்டுத்தொகை வழங்கவும், தடுப்பூசி செலவினத்திற்காகவும் பயன்படுத்தப்படும்.

### பொருளாதாரம்

கறவைமாடு வளர்ப்பில் பயிற்சி அளிக்க ரூ.100 உதவித் தொகை ஒவ்வொரு பயனீட்டாளருக்கும் அளிக்கப்படுகிறது. தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம்-5 முதல் 8 ஆண்டுகள் வரை. இத்திட்டத்தில் வழங்கப்படும் கறவைப் பசுக்கள், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி வரையறுத்துள்ள விலைக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

இத்திட்டம் தவிர, உலக வங்கி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத்திட்டம் 1991-92ஆம் ஆண்டு முதல் ரூ.46.62 கோடி செலவில் ஏழு ஆண்டுகளுக்குச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் உள்நாட்டுக் கால்நடைகளின் தரத்தினை உயர்த்தவும், கலப்பினக் கன்று உற்பத்தியைப் பெருக்கவும்



தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களும் 12 இடங்களில் உறைவிந்து வங்கிகளும் அமைக்கப்பட்டு, மாநிலத்திலுள்ள 3,510 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கு உறைவிந்து குச்சிகள் மற்றும் திரவ நைட்ரஜன் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டம் கால்நடைப்பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து செயலாக்கப்படுகின்றது. அதிக அளவு பால் உற்பத்தி செய்யக்கூடிய கால்நடை தீவனப் பயிர்களை அரசாங்கக் கால்நடைப் பண்ணைகளிலிருந்து பெற்று

பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் பசுந்தீவன உற்பத்திக்குத் தேவையான இடுபொருட்கள் இலவசமாகப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

இதன்படி ஒரு பசு வளர்ப்பதன் மூலம் ஒரு ஆண்டிற்கு இலாபம் ரூ.11,585 ஆகும்.

திருப்பிச் செலுத்தப்படவேண்டிய தொகை ரூ.980.

நிகர இலாபம் ரூ.10,605 ஆண்டிற்கு, நிகர இலாபம் மாதத்திற்கு ரூ.884.

## கன்று வளர்ப்புத் திட்டம்

1983ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் சிறப்பு மத்திய நிதியுதவித் திட்டத்தின்கீழ் இந்து ஆதிதிராவிடர் சமூகத்தினருக்குக் கலப்பினக் கிடேரிக் கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வாழும் ஏழை ஆதி திராவிட சமூக மக்களின் வருவாயினைக் கால்நடை வளர்ப்பின் மூலம் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த இத்திட்டம் பெரிதும் உதவுகின்றது.

இத்திட்டங்களின் உதவியானது நபார்டு நிர்ணயம் செய்துள்ள விலை மதிப்பில் 50% மான்யமும், 50% தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக் கடன் மூலமாகவும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. 1995-96ஆம் ஆண்டில் மொத்தம் 10,000 பயனாளிகளுக்கு கிடேரிக் கன்றுகள் 100% மான்யத்துடன் வழங்கப்பட்டுள்ளன. ஒரு அலகுக்கு ஒரு கிடேரிக்கன்று வீதம் ( நான்கு மாதம் வயது ) ரூ.1500 செலவில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிட பெண் பயனீட்டாளர்களுக்கு ரூ.150 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.


## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஏழை மக்களுக்குக் கறவைப் பசுக்களை வளர்க்க மான்யத்துடன் கூடிய நிதி உதவி அளிக்கப்படுகிறது. பயனாளிகளுக்குக் கறவைப் பசு பராமரிப்பு பற்றி, பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலத்திற்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது; இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பசுக்களுக்கு ஆயுள் காப்பீடு வசதியும் செய்து தரப்படுகிறது.

கிடேரியை சினையாகவோ அல்லது கன்று ஈன்ற உடனோ ரூ.10,000க்கு விற்று இலாபம் பெறலாம்.

## செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்புத் திட்டங்கள்

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம் போன்ற நலத்திட்டங்கள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள ஏழை விவசாய மக்கள் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பின் வழியாகப் பயனடைந்து வருகிறார்கள்.



## ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையினரால் 1976ஆம் ஆண்டு முதல் சேலம், தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர் வடார்க்காடு அம்பேத்கர், திருச்சி பெரும்பிடுகு, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது சேலம் மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளான ஏர்க்காடு கொல்லிமலை, கல்வராயன்மலை, பச்சைமலை, அருநூத்துமலை ஆகிய மலைப்பகுதிகள் - தர்மபுரி மாவட்டத்தின் சித்தேரி - திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் ஜவ்வாது மலைப்பகுதி, வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் ஏலகிரி, திருச்சி மாவட்டத்தின் பச்சைமலை ஆகிய மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினரின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்துடனும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலை பழங்குடியினர் பயனாளிகளுக்கு 75% மானியத்துடனும் செம்மறி ஆடு அலகுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1996-97ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட 10 மலைப்பகுதிகளில் 600 செம்மறி ஆடு அலகுகள், வழங்கப்பட்டுள்ளன. 20 பெட்டையும் ஒரு கிடாவும் கொண்ட ஒரு அலகிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.18,000 ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினப் பயனாளிகளுக்கு 50% மான்யம் வழங்கவும், காப்பீட்டுத் தொகை வழங்கவும், போக்குவரத்துச் செலவினங்களை ஏற்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆடுகளை வளர்க்கவும், இனவிருத்தி செய்யும் முறை கற்பித்தும் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் ஆடுகளைப் பராமரிக்கப் பட்டி அமைப்பதற்கு ரூ.300 மான்யமாக அளிக்கப்படும்.

## சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் கிராமப்புறங்களில் வாழும் ஏழை இந்து ஆதிதிராவிட சமூகத்தினருக்குச் செம்மறி மற்றும் வெள்ளாடு அலகுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் உதவியானது நபார்டு நிர்ணயம் செய்துள்ள விலை மதிப்பில் 50% மான்யமும் 50% தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கடன் மூலமாகவும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகிறது. செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக இருக்கவேண்டும். இத்திட்டம் சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் (10+1) கொண்ட செம்மறி ஆடு அலகும், (3+1) கொண்ட வெள்ளாடு அலகுகளும் அளிக்கப்படுகின்றன.

## ஐரோப்பியப் பொருளாதார ஆடு வளர்ப்புத் திட்டம்

ஐரோப்பியப் பொருளாதார சமூக நிதியுதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் 1989ஆம் ஆண்டு முதல் செங்கை எம்.ஜி.ஆர்., வடார்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார், சேலம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

இப்பகுதியிலுள்ள ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால், ஆடு வளர்ப்போர் மிகவும் பயனடைகின்றனர். அவர்களுடைய ஆடுகளின் எடை அதிகரிக்கின்றது. இனப்பெருக்க சதவிகிதம் அதிகரித்தும் ஆட்டுக் குட்டிகளின் இறப்பு விகிதம் குறைந்தும் உள்ளது. மேலும் இறைச்சியின் எடையும் அதிகரிக்கின்றது. அவர்களின் வருமானமும் இதனால் கணிசமாக உயர்கிறது.

## செம்மறி ஆடுகளுக்குத் தீவிர மருத்துவ நலப்பணி

செம்மறியாடுகளைப் பெருமளவில் பாதிக்கும் குடற்புழுக்களால் ஏற்படும் எடை இழப்பு மற்றும் இறப்பினைத் தடுக்கும் வகையில் ஏழை விவசாயிகள் பராமரிக்கும் செம்மறி ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் முறையாகச் செய்யப்படுகிறது.


சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்கள் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் 1982-83 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


1996-97ஆம் ஆண்டில் 31.1.97 முடிய உள்ள காலத்தில் 17 இலட்சம் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

## பன்றி வளர்ப்பு

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கிவரும் அபிஷேகப்பட்டி, ஒசூர், புதுக்கோட்டை மற்றும் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும், சென்னை-சைதை கால்நடை பெரு மருத்துவமனை வளாகத்தில் உள்ள பன்றிப் பிரிவிலும், மத்திய அரசின் 100 சதவீத மான்ய நிதி உதவியுடன் வெளிநாட்டு இன வெண்பன்றிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இப்பன்றிகள் மூலம் இனவிருத்தி செய்யப்படும் ஆண் மற்றும் பெண் பன்றிக்குட்டிகள் இனவிருத்திக்காக விவசாயிகளுக்கும், ஏனையோருக்கும் அரசு நிர்ணயிக்கும் விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள பன்றி வளர்ப்புப் பிரிவு மூலம் கிடைக்கும் உபரியான பன்றிகள் மற்றும் பன்றி வளர்ப்புக் கூட்டுறவு சங்கத்தின் மூலம்





பெறப்படும் பன்றிகள் சுகாதார முறையில் அறுக்கப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு நியாயமான விலையில் தரமான புரதம் மற்றும் கொழுப்புச்சத்து நிறைந்த இறைச்சியை வழங்க மாநில அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் வளர்க்கப்படும் உயரின வெளிநாட்டுப் பன்றிகளின் குட்டிகள் இனவிருத்திக்காக மாநிலம் முழுவதிலும் தேவைப்படும் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் அரசு நிர்ணயிக்கும் நியாயமான விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

## கோழி வளர்ப்புத் திட்டங்கள்

கோழி வளர்ப்பின் மூலம் தமிழக மக்கள் உபரி வருமானம் பெறுவதுடன், தங்கள் குடும்பத்திற்குத் தேவையான போதுமான புரதச் சக்தியினையும் கோழி இறைச்சி மூலம் பெறுகின்றனர்.

புறக்கடை கோழி வளர்ப்பானது கலப்புப் பண்ணை முறையில் வரவேற்கத்தக்கது. கால்நடைப் பராமரிப்புத் துறையானது, பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் ஏழை விவசாயிகளுக்குக் கோழி அலகுகளும், வாத்து அலகுகளும் வழங்கிவருகிறது.

## சிறப்பு மத்திய உதவித் திட்டம்

சென்னை நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இந்து ஆதிதிராவிடப் பெண் பயனீட்டாளருக்கு 50% மான்யத்துடன் கோழி மற்றும் வாத்து அலகுகள் வழங்கப்படுகின்றன. 1995-96ஆம் ஆண்டில் அசில் கோழியினங்கள் (12 வார வயது) ஒரு அலகிற்கு 5 பெட்டை + 1 சேவல் என்ற விகிதத்தில் ஒன்று இருபது ரூபாய் மதிப்பில் 10,000 பெண் பயனீட்டாளர்களுக்கு 100% மான்யத்துடன் வழங்கப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ரூ.12.00 இலட்சம்.

கிரிராஜா கோழிக் குஞ்சுகள் 100% மான்யத்துடன் ஒரு அளவிற்கு 10 குஞ்சுகள் (ஒரு குஞ்சு ரூ.12) வீதம் 6 முறை வழங்கப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டு ரூ.72.00 இலட்சம் செலவில் 10,000 பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## புறக்கடை கோழி வளர்ப்புத் திட்ட அலகுகள்

| | | |
|---|---|---|
| கோழி அலகு (10 + 1) மதிப்பு | : ரூ. | 550.00 |
| கோழி வீடு கட்டணம் | ரூ. | 100.00 |
| குடற்புழு நீக்கம் | ரூ. | 10.00 |
| மொத்தம் | ரூ. | 660.00 |
| வாத்து அலகு (50+5) மதிப்பு | ரூ. | 3300.00 |
| மான்யம் 50% | ரூ. | 1750.00 |
| வாத்து வீடு கட்டணம் | ரூ. | 200.00 |
| மொத்தம் | ரூ. | 1950.00 |

இத்திட்டங்கள் தவிர, கோழிகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து, குறித்த காலத்தில் தடுப்பூசிப் பணிகளை மேற்கொள்ள உதவும் வகையில் கோழிப் பண்ணைகள் மிகுதியாகக் காணப்படும் சேலம் மாவட்டத்திலுள்ள ஆண்டலூர்கேட் மற்றும் பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டிலும் கோழி நோய் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கோழித் தீவனத்தின் தரத்தைப் பரிசோதித்து, தகுந்த அறிவுரையும் வழங்கப்படுகிறது.

வேளாண் பெருமக்களுக்கு மதுரை


நிலவளவங்கி மூலம், பல

சலுகைகளைச் செய்து வருகிறது. நில வள வங்கி

வழங்கும் உதவிகளைப் பெற்று


வங்கியில் உறுப்பினராகி

உயர்வடைய வேண்டுகிறோம்.



அன்புள்ள

**இ. சண்முகம்**
தலைவர்
நிலவள வங்கி
தளபதி ஸ்டாலின் மாளிகை
சாத்தமங்கலம் சாலை
மதுரை - 625 010.



**டேனிடா உதவியுடன் கால்நடை வளர்ப்புத்திட்டம்**


டேனிடா உதவியுடன் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுத்திட்டம் ரூ.4.4 கோடி செலவில் முதல் கட்டமாக 1989ஆம் ஆண்டு முதல் 1997 பிப்ரவரி வரை 7 ஆண்டுகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வந்தது. இதில் முதல் நிலையாக 154 தொடர்புப் பணியாளர் தம்பதிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குக் கால்நடை பராமரிப்பு குறித்து 20 நாட்களுக்கு அடிப்படை பயிற்சியும் பின்னர் 5 நாட்களுக்குப் புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சியின்போது ஒரு நாளைக்கு 50 ரூபாய் உதவித் தொகையும், ரூபாய் இரண்டாயிரம் செலவில் மிதிவண்டியும் வழங்கப்பட்டது.

இவர்களுக்கு ரூ.400 மதிப்பூதியமும், இவர்களின் சிறந்த பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5000மும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் இரண்டாம் நிலையாகப் பயிற்சி பெற்ற 154 தம்பதியரும் முறையே 45 திட்ட தொடர்பு விவசாயிகளுக்கு 2 நாள் அடிப்படைப் பயிற்சியும், ஒருநாள் புத்தாக்கப் பயிற்சியும் அளித்துள்ளனர். இந்தப் பயிற்சியின்போது, திட்டத் தொடர்பு விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.30 உதவித்தொகையும் வழங்கப்பட்டது. இரண்டாம் நிலை பயிற்சி பெற்ற 45 திட்டத்தொடர்பு விவசாயிகளில் சிறந்த விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.1000 மதிப்பில் முல்லை மேய்ச்சல் நிலம் அமைக்கவும், ரூ.200 மதிப்பில் கல்தீவனத் தொட்டியும் ரூ.200 மதிப்பில் தட்டை வெட்டும் கருவியும் வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர, ஊட்டமேற்றிய வைக்கோல் தயாரித்தலுக்கு ரூ.50-ம், செம்மறி மற்றும் வெள்ளாட்டுப் பொலி கிடா வாங்குவதற்கு ரூ.500-ம் வழங்கப்பட்டது. இவை தவிர ரூ.4 இலட்சம் மதிப்புள்ள பசுந்தீவன விதைகளுக்கு விதைக் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

டேனிடா உதவியுடன் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுத் திட்டம் இரண்டாவது கட்டமாக புதுக்கோட்டை, காமராஜர், இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் ரூ.27 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதனால் தன்னிச்சையாகக் கால்நடை தொழில்களான சிறியகோழிப்பண்ணை வைத்தல், ஆடுவளர்ப்பு போன்ற தொழில்களை மேற்கொண்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்புப் பெறுகின்றனர்.



**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டக் காலம் முதல் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டங்களில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு உழவர் பயிற்சி நிலையம் போன்றவை அமைக்கப்பட்டு ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்பட்டுவருகிறது. ★

# தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்

(இந்திய அரசு மற்றும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்)


4, டி.பி. ரோடு, மதுரை-625 010.

தொலைபேசி : 602388, 602476

ஃபேக்ஸ் : 602455

**தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு எங்களின் தொண்டு**

| | | |
|---|---|---|
| பாரதப் பிரதமர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் பயன் பெற்றவர்கள் இதுவரை | ... | 14,000 பேர் |
| எங்களது மையத்தின் மூலம் பயன்பெற்ற பெண்கள் சுமார் | ... | 6,000 பேர் |
| பெண்களுக்கு பல்வேறு சிறப்பு பயிற்சிகள்- தற்போது கம்ப்யூட்டர் பயிற்சியில் பயன்பெறும் பெண்கள் | ... | 60 பேர் |
| எங்களது மையம் இதுவரை சமர்ப்பித்த தொழில் ஆலோசனை ஆய்வு அறிக்கைகள் | ... | 12 |
| எங்களது மையம் இதுவரை மாவட்ட தலைநகரை மையமாகக் கொண்டு பணியாற்றும் இணை மையங்கள் | ... | 12 |

# கிராமியக்கலை இயக்கத்தால்

# வளரும் தமிழ்...

முனைவர் கே.ஏ. குணசேகரன்

குறிப்பிட்ட இனத்தாரின் செல்வாக்கு உயர்ந்தோங்கிய காலத்தில் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வு, வர்க்க முரண்பாடுகள், சாதி வேறுபாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட சமூகம் உற்பத்தி உறவுகளுடன் விளங்குவது இயல்பு. உற்பத்தி உறவுகளுடனும் வர்க்கங்களுடனும் சாதி உருவாக்கப்படும் சம காலத்திலேயே அவற்றால் சாதியமும் வளர்க்கப்படுகிறது. சாதீயம் வளர்ச்சி பெற்ற இந்தியாவில் கிராம மக்களின் மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம், போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நீண்ட காலமாகக் கிராமிய மக்களின் கலை இயக்கம் சாதீய ரீதியில் ஒடுக்கப்பட்டு இருந்தது. இந்த மண்ணில் ஒடுக்கு முறையின் பயனாய்க் கிராமியக்கலை இயக்கம் என்பது வளர வாய்ப்பில்லை. எனினும் ஆங்காங்கே பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மலையின மக்கள் ஆகியோர் குடும்பம் மற்றும் குடியிருப்புக்கள் எனும் அளவில் சித்றிய நிலையில் இயக்கங்கள் வளரத் தலைப்பட்டுள்ளன. மேலாதிக்கச் சாதியினரின் சடங்குகளை நிறைவேற்றும் பொருட்டு அதை ஒட்டிய இரசனைத் தேவைக்காய் அறிந்தோ அறியாமலோ, ஆங்காங்கு மேற்சொன்ன அளவில் அமைதியாய் கிராமியக் கலை இயக்கம் தனித்த நிலைகளில் வளர வாய்ப்பேற்பட்டுள்ளது.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமி பெயரில் விளங்கும் நாடகக் கலைச் சங்கங்கள் மதுரை, புதுக்கோட்டை, மணப்பாறை என உள்ளன. தென்தமிழ் நாட்டின் கிராமங்களில் இந்நாடகக் கலைச் சங்கத்தார் வழியே பேச்சு வழக்குச் சொற்கள், தமிழ் இலக்கியம் மற்றும் கலைச்சொற்கள் அறிமுகமாவதோடு தமிழ்த் திரைப்படங்களின் கதையாடல்களும், சொல்லாடல்களும், பாடல்களும் அறிமுகமாகி வருகின்றன.

தேவராட்டக் கலைக்குழுக்கள், மதுரை, தூத்துக்குடி, விளாத்திக்குளம் ஆகிய பகுதிகளில் இன்று பரிணமித்து வரக் காண்கிறோம். மேலும் இராமாயணம், மகாபாரதக் கதைகள் பாடி ஆடும் ஒயிலாட்டக்கலைக் குழுக்கள் இன்று ஆங்காங்கு முளைத்தெழும் சூழல் ஏற்பட்டுள்ளன.

''சீதையக் காணாமின்னு ராமரிடம் சேதி ஒரைக்கலாமா?" என்பதான வட்டார மொழி நடையிலேயே ஒயிலாட்டக்கலைக் குழுக்கள் பாடி வருகின்றன.

தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நையாண்டிமேளம் மற்றும் கரகம்,



குறவன் குறத்தி ஆட்டம், ராஜாராணி ஆட்டம் ஆகிய கிராமிய ஆட்டக்கலைஞர்கள் சங்கங்கள் உள்ளன. உளுந்தூர்பேட்டை, காஞ்சிபுரம், புரிசை போன்ற பகுதிகளில் தெருக்கூத்துக் கலைஞர்கள் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. நெல்லை, குமரி மாவட்டப் பகுதிகளில் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் சங்கங்களும், கணியான்கூத்து (மகுடாட்டம்) கலைஞர்கள் ஒருங்கிணைப்புக்களும் ஆங்காங்கு ஏற்பட்டுள்ளன.

பெரியபட்டி தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவு வங்கி

வேளாண் பெருமக்களுக்குப் பெரிதும் உதவி

செய்து வருகிறது.

வங்கியின் சிறப்போடு 'தமிழரசு' ம் சிறக்க

வாழ்த்துகிறோம்.

அன்புள்ள

பி. மூர்த்தி, பி.ஏ.,
தலைவர்

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

பெரியபட்டி, மதுரை மாவட்டம்.





நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி வழி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, கணிசமான தாக்கத்தை செவ்வியல் கலை இலக்கிய மொழியாளர் மத்தியில் செய்து வருகின்றனர். அவர்கள் தொடக்கி வைத்த மக்கள் பிரச்சினைகளைக் கொண்ட நாட்டுப்புற ஆடல், பாடல் கலைநிகழ்ச்சிப் பயணத்தில் இன்று கொல்லங்குடி கருப்பாயி அம்மாள், கோட்டைச்சாமி குழு, சிங்கம்புணரி தங்கராசு குழு, விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் கலைக்குழு, பரவை முனியம்மாள் கலைக்குழு, புஸ்பவனம் குப்புசாமி கலைக்குழு எனப்பல கிராமியக் கலைக்குழுக்கள் தோன்றி வருகின்றன.

கிராமியக் கலைக்குழுக்களிடையே ஒருங்கிணைந்த இயக்கம் தமிழகத்தில் இன்று இல்லை. எனினும் அந்தந்த வட்டாரம், கலைகள் இடையே சங்கங்கள் தோன்றி வருவது நம்பிக்கை தருவதாய் உள்ளன. எனினும் மேற்சொன்ன இயக்கங்களின் தாக்கங்கள், திரைப்படம் வரை உள்வாங்கப்பட்டு மக்களிடையே பெரிதான பாதிப்பை கலாச்சாரம் மற்றும் மொழி ரீதியில் ஏற்படுத்தியுள்ளன.

சங்க இலக்கியம் தொட்டு பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், இன்றைய நாவல், சிறுகதை, சினிமா, நவீன நாடகம் என அத்தனையிலும் கிராமியக் கலைக்கூறுகளின் தாக்கம் நிறைந்துள்ளன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அத்தனைக்கும் எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்கும் வாய்ப்பு இக்கட்டுரையில் இல்லை எனினும் சுதந்திரத்திற்குப் பின் - குறிப்பாக வெகுசன ஊடகங்களின் பயனாய் இன்றைய தமிழ் வளர்ச்சி பெற்றமைக்குக் கிராமியக்கலை இயக்கத்தின் பங்களிப்பு ஏராளம் உண்டு.


திராவிடர் இயக்கம் தமிழ் மொழி உணர்வை அடித்தளமாகக்கொண்டது. மணிப்பிரவாள நடை, தூய தமிழ்நடை எனத் தமிழ் மொழி வளர்ச்சியில் நாம் காண நேரிடினும் ஒடுக்கப்பட்ட மக்களின் பேச்சு மொழிநடை கவனிப்பாரற்றுக் கிடந்தது.

எல்லா நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் மொழி நடையான பேச்சு மொழி என்பது மொழிபெயர்ப்புப் படைப்புக்களானாலும் சரி, மேலை நாட்டுப் படைப்புக்களைத் தழுவிப் படைக்கப்பட்டவைகளானாலும் சரி, சாமானியப்பட்ட மக்களின் மொழிநடை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் பெரும்பான்மை பலத்தை எட்டியிருப்பினும் சிறுபான்மை மக்களின் கலாச்சாரத் தாக்குதலே அறிவுத்தளத்திலும் சரி அனைத்துத் தளத்திலும் சரி, பெரும்பான்மை பலத்தை எட்டியிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் (தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள்) கலாச்சாரத்தை அடிமைப் படுத்தியது. அதன் ஒரு அங்கமாகவே பேச்சு மொழியைக் கொச்சைமொழி என்றும், கொடுந்தமிழ் என்றும் இழிவுபடுத்திய மோசடியை நாம் உணர்ந்துள்ளோம். மேலாதிக்கச் சாதி மக்களின் கலாச்சாரத்தளத்தில் ஏட்டுத்தமிழ் என்றும் செந்தமிழ் என்றும் தீந்தமிழ் என்றும் கொண்டாடும் நிலையினை நாம் அறிகிறோம்.

இன்று, தகவல் தொடர்புச் சாதனங்கள் எண்ணிறந்துள்ள சமூகமாக உள்ளது. இன்று சிலர் வெள்ளாளர் சாதி மக்களின் நாகரிகக் கொடையில்தான் தமிழ் அடையாளத்தைக் காணமுடியும் என்று வாதிடுகின்றனர். மேலாதிக்கச் சாதியினர் தீண்டாமைக் கொள்கையினை மொழி நடையிலும் கூட முக்கியமாகக் கைக்கொண்டனர்.

புனிதத்தன்மையினைத் தமிழ் நடைக்குப் புனைந்துரைத்தனர். முருகனோடும், சிவனோடும், அகத்திய முனிவரோடும் இப்புனைவுகள் இட்டுக்கட்டப்பட்டன. இப்படித்தான் ஆதிக்கச் சாதீய ரீதியில் தமிழ் மொழி சாமானியப்பட்ட மக்களிடமிருந்து அன்னியப்படுத்தப்பட்டது. அந்தப் புனைவுகளும், புனிதங்களும் இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டுப் பேச்சுத்தமிழ் வெகுசன ஊடகங்களின் உதவியுடன் எங்கும் ஊடுருவியுள்ளது. இவை போன்ற சொற்களும் நாட்டுப்புற இசை வடிவங்களான தெம்மாங்கு; சிந்து இசை வகை, கண்ணி, நையாண்டி இசை வகை போன்றவை இளையராஜா வருகைக்குப்பின் விதவிதமாய்த் திரைப்பாடல்கள் வழியே அறிமுகப்படுத்தப்பட்டன.

கரிமேட்டுக் கருவாயத்தேவன் கதை; மலையூர் மம்பட்டியான் கதை, தீச்சட்டி கோவிந்தன் கதை போன்ற நாட்டுப்புறக் கதை வீரர்களைக்கொண்ட திரைப்படங்களின் வருகையினால் உடை, ஒப்பனை




பிறக்க முக்தி திருவாரூர்,

இருக்க முக்தி திரு காஞ்சி,

காண முக்தி திரு தில்லை,

இறக்க முக்தி திரு காசி,

நினைக்க முக்தி திரு அண்ணாமலை,

சுவைக்க சக்தி "ஆகாஷ்"-

# ஆகாஷ் ஹோட்டல்ஸ் A/c.

## போர்டிங் & லாட்ஜிங்

9-H, போளூர் ரோடு

திருவண்ணாமலை

போன் : 22151, 22152, 22751

முறைமைகளுடன் இயல்பான பேச்சு மொழிநடைகள் வெளிப்பட்டன.

*'சிஞ்சின்னாக்கடி*
*டாங்குனக்கடி*
*ஜிம்சிக்கா*
*தைத்தக்கா*
*ஏலேலம்படி*
*ஏலேலோ*
*அய்லய்லா*
*லூலுலூய்...'*(குலவை இடுதல்)

வாய் ஒலி (விசில் அடித்தல்) எழுப்புதல் எனும்படியான நாட்டுப்புற இசைமொழிச் சொற்கள் இன்று திரைப்படங்களின் வழியே வெகுசன மக்களிடம் அறிமுகம் பெற்றுள்ளன.

இன்று திரைப்படங்களின் வழியே பல பகுதி மக்கள் அறியும் வகையில் இனமொழி நடைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. தேவர்மகன், மறவன் என்னும் திரைப்படங்களின் வழியே

*'சும்மா கெடங்கோய்'*
*'அவிங்க அவிங்க பண்ணுறாங்கெ'*
*'பேயாமக் கெடக் கணும்'*

- என்பதான கள்ளர் இனத்தவர், குறிப்பாக மதுரை மாவட்டப் பகுதியினர் பேசும் பேச்சுமொழி நடை மக்களிடம் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

*'ஏனுங்க பாத்துப்புட்டுச் சும்மா போறீங்க'*
*'என்றன் பேருக்கு மாத்திப் போடனுமுங்க'*
*'உன்றன் மகளக்கட்டிக்கிறனுமுங்க'*

என்பதான சொல்லாட்சிகள் கொங்கு நாட்டுக்கவுண்டர் இனமொழி நடை, "சின்னக்கவுண்டர்", ''கவுண்டர் பொண்ணா கொக்கா'' என்பதான திரைப்படங்கள் வழியே எல்லாப்பகுதி இன மக்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நகர்சார் நாட்டுப்புற (Slum people) மக்கள் வாழும் நகரச் சேரி மக்களின்-

*'தம்மாத்துண்டு'*
*'தா-மூஞ்சியப்பாரு'*
*'மொகரைப் பேத்திடுவேன்'*
*'வாயப்பயம்'*

என்பதான பேச்சுமொழி நடைகள் இன்று அனைத்து மக்களுக்கும் புரிய வைக்கப்பட்டுள்ளன.

*கண்டாங்கிச் சேலை*
*கருப்பண சாமி*
*கரிசக்காடு*





# மதுரை கிழக்கு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம்

**கருப்பாயூரணி, மதுரை.**

எங்கள் மையத்தின் மூலம், அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு 4½ இஞ்சு, 6 இஞ்சு அளவுள்ள ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்,இரும்புக் கதவுகள், கிராதிகள், ரோலிங் ஷட்டர், வேளாண்மை கருவிகள், மரத்தளவாடச் சாமான்கள் மற்றும் இரும்பு சம்பந்தப்பட்ட அனைத்துக் கருவிகளும், தரமான முறையில் தயார் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புள்ள

**க. பாலுச்சாமி**
தலைவர்

**எம். சி. முத்து**
முதுநிலை மேலாளர்

மம்பட்டி
மடைதொறந்து
எட்டு வச்சுவாடா
அப்படிப்போடு அறிவாள...

முந்தானை
எம்புட்டுத் தொலை
ஏவேய் யாருலே
பாவிமக்கா
சண்டாளப்பாவி
நாம்பெத்த மக்கா...

ஏப்பு
அத்துவானக்காடு
ஒன்னுக்குள்ள ஒன்னு
ஒன்னா மன்னா
எடுவட்டபயகா
கம்மனாட்டி
மண்ணாங்கட்டி
கோணப்பயலே
வெத்துவேட்டு
பொத்திவச்ச
பொக்கவாயி
சம்சாரி
ஊதக்காத்து
தெக்கத்தி...



- என்பன போன்ற வார்த்தைகள், தொடர்கள் இன்று அந்தந்த வட்டாரத்தைத் தாண்டி வெகுசன ஊடங்களின் வழியே அறிமுகமாக்கப்பட்டு அனைத்து மக்களிடையேயும் செல்வாக்குப் பெற்றுள்ளன. இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள் தூய தமிழ்ப் பண்டிதர்களால் முன்பு தீண்டாமைக்குட்படுத்தப்பட்டவை என்பதை நாம் அறிந்துள்ளோம்.

ஒரு மொழி புதியவளம் பெற்று வளர வேண்டும். இப்புதிய வளத்துக்கு அம்மக்களின் வாழ்க்கை நிலைகளின் மாற்றம் அடித்தளமாக அமையும். கிராமியக்கலை இலக்கியத் தாக்கம் வெகுசன ஊடகங்களில்-குறிப்பாகத் திரைப்படங்களில், ஒலி நாடாக்களில், தொலைக்காட்சிகளில் எண்ணிறைந்த தாக்கத்தை வெகுசன மக்களிடம் ஏற்படுத்தியுள்ளன.

தூய தமிழ்நடையின் வீச்சினைவிட பேச்சுத்தமிழ் நடையின் வீச்சு என்பது பல நிலைகளில் கூடுதல் தன்மை பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக—

"இவ்விளிக் காணுப்பய என்னைய அடிச்சுப்புட்டான்"

எனும் ஒரு தொடர் 'இவ்வளவு-காணும்-பையன் என்னை அடித்து விட்டான்' என்பதாகும். இவ்வளவு என்பது சிறு பையன் எனக்காட்ட வந்துள்ளது. என்னைவிட வயதில், வளர்த்தியில் மிகவும் சிறியவன் என்னை அடித்துவிட்டான் - எனப்பொருள் கொண்ட இத்தொடரில் என்னைவிடச் சாதியில், பொருளாதாரத்தில், செல்வாக்கில் வர்க்கத்தில், கூடுதலாக அச்சிறுவன் இருந்ததால் வயதிலும், வளர்த்தியிலும் மட்டுமே குறைந்திருந்த அவன் இன்னபிறவற்றில் கூடுதல் தகுதியைப் பெற்றிருப்பதாகச் சமூகம் கற்பித்திருப்பதால் மிகவும் சின்னப்பயலாக அவன் இருந்தும் என்னை அடித்து விட்டான் எனப்பொருள் இருக்கிறது.

நிறைய எழுதிப் பொருள் விளங்க வைக்கக் கூடிய ஒரு தொடரை அல்லது ஒரு சொல்லை பேச்சு வழக்கில் பரந்த அளவில், ஆழமான அளவில் இலகுவாக படக்கென சொல்பவருக்கும் கேட்பவருக்கும் இடையே இடைவெளிப்பாடு இன்றி இருவரும் அறிய ஏதுவாகிறது. புரிதல், பயன்பாடு உடனடியானதும், எளிமையானதும் ஆக உள்ளது. தூயதமிழ் எழுத்துமொழி என்பதில் அவரவர் வாசிப்பின் ஆழம் எனும் அளவிலேயே புரிதல் இடைவெளிப்பாட்டுடன் அமைகிறது என்பதனை இங்கு எண்ணிப்பார்த்தல் நலம். பேச்சுமொழியின் கூடுதல் சக்தி மொழிப் பயன்பாட்டில் கூடுதல் பயன்பாட்டினைத் தருகிறது என்று முடிவு செய்ய நேர்கிறது.

நீண்டகாலமாகத் தீண்டாமைக் கொள்கையினைக் கடைப்பிடித்து வந்த தமிழ்ப் பண்டிதர்களை மீறி நாம் ஏற்கெனவே கூறியதுபோல் வெகுசன ஊடகங்களின் வழியே குறிப்பாக திரைப்படம் வழியே சாதிவாரி மொழிநடை, வட்டார மொழி நடை என்றெல்லாம் எல்லை குறைக்கப்பட்டிருந்த பேச்சுமொழிநடை இன்று அனைத்துப் பகுதி மக்கள் மத்தியிலும் புரிதல் மற்றும் பழக்கம் எனும் நிலைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன.

*'சிங்கார ரூபனே'*
*'பிருந்தாவனமும் நந்தகுமாரனும்'*
*'பிரேமையினாலே'*

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

கருப்பாயூரணி, மதுரை மாவட்டம்.

தமிழ்மணம் பரப்பி

தலைநிமிரச் செய்திடும்

'தமிழரசு' க்கு

எங்களுடைய

வாழ்த்துக்கள்!

கருப்பாயூரணி தொடக்க

வேளாண்மை கூட்டுறவு வங்கி


வேளாண் பெருமக்களுக்கு

பெரிதும் உதவி செய்து வருகிறது.

அன்புள்ள

**இ. தங்கராஜ்**

தலைவர்





-என்பதான சொற்பதங்களைத் திரைப்படத்திலிருந்து விரட்டியடிக்கச் செய்து பாமர மக்களின் சொற்பதங்களான

*'காடுவெளஞ்சென்ன மச்சான்*
*கையும் காலுந்தானே மிச்சம்'*
*'குட்டிஆடு தப்பி வந்தா குள்ளநரிக்குக் கொண்டாட்டம்'*
*'மாடா ஒழச்சவன் மம்பட்டியாத் தேயுறான்!'*

என்பது போன்ற பேச்சு நடைமொழி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வருகையால் ஏற்பட்டது. வெகுசன மக்கள் மேடைகளில் பட்டி தொட்டியெங்கும் சென்று தம் சகோதரர்களின் பங்களிப்போடு பாடல் பாடி வசனம் பேசிக் கலை நிகழ்ச்சி செய்த பாவலர் வரதராசன் சகோதரர்களின் வருகையால் ஒப்பாரி, தாலாட்டு, தெம்மாங்கு போன்ற இசை வடிவங்களின் வழியேயும் திரைப்பாடல் மெட்டுக்கள் வழியேயும்

'ஒத்தருவா தாறேன் நான்
ஒன்னப்புத்தட்டும் தாறேன்'

'போடா போடா பொக்கே
எள்ளுக் காட்டுக்குத் தெக்கே'

-என்பதான சொல்லாட்சிகளும், பேச்சுமொழி நடைகளும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளன. மக்கள் தமிழை மகிமைப்படுத்தியப் பெருமை திரைத்துறையில்; மேடைகளில் பட்டுக்கோட்டையார் மற்றும் பாவலர் சகோதரர்கள் ஆகியோருக்குக் கணிசமான பங்குண்டு.

வாரத்துக்கு ஒரு தடவை மட்டுமே குறிப்பாகக் கால்மணி நேரத்திற்கும் குறைவான நிகழ்ச்சிதான் கிராமியக்கலை எனும் தலைப்பில் தொலைக்காட்சியில் காட்டக் காண்கிறோம். தொலைக்காட்சியினர் காட்டும் நேரம் அதிகமாக்கப்படவேண்டும். நறுக்குத் தெறிச்சாப்பிலே சொல்லனும்னா மண்வாசனை கொண்ட கிராமியக் கலாச்சாரக் கூறுகள் இல்லைனா பெரிசாச் சொல்லுற கலை இலக்கியம் செத்துப்போய் புதைந்துவிடும் என்பது மட்டும் உறுதி.


கிராமியக் கலாச்சாரக் கூறுகள், வட்டார மொழி நடை, பாத்திரங்களின் குணநலன்கள் அல்லது சித்திரிப்பு முறைமை, கதை கூற்று பாணி(narrative) உவமை, உருவகம் போன்றவற்றைப் பயன்படுத்தும் முறைமை, சொலவடை, ஒவகதை (உபகதை) போன்ற கூறுகள் வழியே வெகுசன ஊடகங்களில் குறிப்பாகப் படைப்புக்களில் பயன்படுத்தி இன்றைய தமிழ் பாய்ச்சல் வேகத்தில் வளர்ச்சி பெற்று வருகிறது. கிராமியக்கலை இலக்கிய இயக்கங்கள் இங்கு ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு ஓரணியாகும் போது தமிழ் அறிவியல் யுகத்தில் பன்முக வளர்ச்சி பெறும். அப்போது தமிழ்ப்பண்டிதர்கள் கைகளிலிருந்து சாமான்யப்பட்ட மக்களிடம் மொழி தட்டிப்பறிக்கப்படும்.

கிராமியக்கலாச்சாரத் தாக்கம் பெற்றே நமது சங்க இலக்கியம் முதல் நவீன கலை இலக்கியங்கள் வரை உருப்பெற்றுள்ளன. இன்றும் இந்நிலையே தொடர்கிறது. கிராமியக் கலாச்சாரத் தாக்கம் இல்லாது ஒரு படைப்பு கலை இலக்கியத்துறையில் இல்லை. இருக்க முடியாது. கிராமியக்கலாச்சாரம் இல்லை எனில் கலை இலக்கியப்படைப்புக்கள் செத்துவிட்டன என்றே முடிவு கொள்ளலாம்.

# SLT

## கிராஸ் பிரீடு மாட்டுத்தீவனங்கள்

அதிக பால்
நிறைந்த லாபம்


SLT
ANIMAL FEEDS
FOR
PROFITS

தயாரிப்பாளர்கள்:-

**எஸ்.எல்.டி. அனிமல் ஃபீட்ஸ் (பி) லிட்.,**

511, எஸ்.கே.சி. ரோடு, சூரம்பட்டி நால்ரோடு, ஈரோடு - 638 009
போன்: 216665, 220306 தந்தி: ஃபீட்ஸ்.

# சிப்பாய் சின்னத்தம்பி



சாமகோடாங்கி சங்கரலிங்கம்

சிப்பாய் சிங்காரம் புதுவீடு கட்டியிருந்தான். வீடு சின்ன அரண்மனை போல் இருந்தது. வீட்டின் உள்ளும் புறமும் பல வண்ணங்களில் கண்ணைப் பறித்தது.

புதுவீட்டில் குடிபுகும் விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தான் சிங்காரம். அரண்மனையிலிருந்து தளபதியும் முக்கியப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

விருந்து தடபுடலாக நடந்தது. அரண்மனை விருந்துபோல் இருப்பதாக எல்லோரும் சிங்காரத்தைப் பாராட்டினார்கள்.

சிங்காரம், அவன் பிள்ளைகள் அனைவரும் பட்டாடைகள் அணிந்து பகட்டாகக் காட்சியளித்தனர். சிங்காரத்தின் மனைவி ராஜாத்தி அங்குமிங்குமாக ஓடி ஓடி வந்தவர்களை உபசரித்தாள். அவளைப் பார்த்து "நகைக் கடையே நடந்து போகுது" என்றனர் சிலர்.

சிப்பாய் சின்னத்தம்பியின் மனைவி கமலம் ராஜாத்தியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். இவள் கணவன் சின்னத்தம்பியும் சிங்காரமும் ஒரே நாளில்தான் அரண்மனையில் சிப்பாயாகச் சேர்ந்தனர்.

சிங்காரம் வீடு, வாசல், நிலம் நீச்சு என்று வாங்கிக் குவித்து விட்டான். ஆனால் சின்னத்தம்பி எதற்கும் லாயக்கில்லை. இன்னும் வாடகை வீட்டை விட்டால் வழியில்லை. ஒரு நல்ல சாப்பாடு இல்லை. நல்ல துணிமணிகள் இல்லை. தன் தாய் வீட்டில் தனக்குப் போட்ட நகைகள் கூட வட்டிக்கடையில்.

கமலம் இதுபற்றி தன் கணவனிடம் பேசாத நாளில்லை. எதைச் சொன்னாலும், "நேர்மை– புடலங்காய்" என்று பேசிக்கொண்டிருந்தான். கமலத்திற்குக் கண்களில் கண்ணீர் முட்டியது.

தன் புடவையில் இருந்த கிழிசல் தெரியாமல் அதை மறைத்துக் கட்டுவதற்குள் போதும்போதும் என்று ஆகிவிட்டது.

"அவனும் சிப்பாய்தான்–எல்லாவற்றிற்கும் கொடுத்து வைத்திருக்கவேண்டும்–" என்று பக்கத்துவீட்டுப் பத்மா இவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள். இவளுக்கு எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டது போலிருந்தது.

நல்ல துணிமணி இல்லாததால் தன் குழந்தைகளைக்கூட தங்களுடன் அழைத்து வரவில்லை சின்னத்தம்பி இதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. எல்லோரிடமும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். இவளுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அவனிடம் சொல்லிக்கொள்ளாமலேயே வீட்டிற்குத் திரும்பினாள் கமலம்.

சின்னதம்பி வீட்டிற்குத் திரும்பினான். கோபத்துடன் இருந்த கமலத்தைச் சமாதானப்படுத்தினான். கமலம் எதற்கும் சமாதானம் ஆகவில்லை. "சிங்காரம் நேர்மை இல்லாத வழியில் சம்பாதிக்கிறான். அது போன்ற சம்பாதனை நமக்கு வேண்டுமா?" என்று கேட்டாள்.

''இப்படி நீங்கள் நியாயம் நேர்மை என்று பேசிக்கொண்டிருந்தால் நான் இப்படி கிழிந்த புடவையைத்தான் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்'' என்றாள் கமலம்.

''நேர்மையான வழியில் சம்பாதித்த பொருள் நிலைத்து இருக்கும். நியாயமற்ற முறையில் வந்த பொருள்..வந்தவழியே போய்விடும்'' என்று எடுத்துக் கூறினான். சின்னத்தம்பி சொன்னது எதுவும் அவள் காதுகளில் ஏறவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆயிற்று.

"இதுதான் உங்கள் முடிவா?.."என்றாள் கமலம்.

''ஆமாம்...''என்று உறுதியாகச் சொன்னான் சின்னத்தம்பி. சின்னத்தம்பி சொன்னதைக்கேட்டு கமலத்திற்கு ஆத்திரமும் அழுகையும் பொத்துக்கொண்டு வந்தது.

அடுத்த நிமிடமே கமலம் கோபித்துக்கொண்டு தன் பெற்றோர் வீட்டிற்குக் கிளம்பினாள். சின்னத்தம்பி எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை.

"இனிமேல் என்னால் உங்களோடு குடும்பம் நடத்த முடியாது'' என்று சொல்லிவிட்டுத் தனது அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

நாட்கள் கடந்து மாதங்களாயின. எப்படியும் கமலம் திரும்பி வந்து விடுவாள் என்று சின்னத்தம்பி நம்பினான்.

தமிழ்நாடு அரசு

'தமிழரசு'


- இரண்டினுக்கும்

எங்கள்

இதய வாழ்த்து!

அன்புடன்

**பி.எஸ். ஜான்**
*தலைவர்*



# மதுரை - ராமநாதபுரம்
# கேன்டில்ஸ் தயாரிப்பாளர்கள் சங்கம்

27, தேசிய விநாயகர் கோவில் தெரு,
கே. புதூர்,
மதுரை - 625 007.

ஆனால் அவள் வரவில்லை.

கமலத்திற்கு இன்னும் கோபம் தணியவில்லை. அதனால் திரும்பிப் போவது பற்றி அவள் யோசனையும் செய்யவில்லை. ஆயினும் குழந்தைகளை நினைத்து உருகினாள்.

சின்னத்தம்பி ஒருநாள் வந்து அவளை வீட்டிற்கு வருமாறு அழைத்தான். அப்படியும் அவள் அழைப்பிற்குச் செவி சாய்க்கவில்லை. அவன் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றான்.

ஒருநாள் அவள் வீட்டிற்கு அருகாமையில் இருந்த வீதியில் சிப்பாய்கள் நடந்து சென்றவண்ணம் இருந்தனர். அரண்மனைக்கு வெகுதூரத்தில் இருந்த இந்த ஊருக்குச் சிப்பாய்கள் என்ன காரணத்திற்காக வந்திருக்கிறார்கள் என்று அவளால் யூகிக்க முடியவில்லை.

சற்று நேரத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்தாள். அங்கு, கையில் நீளமான ஈட்டிகளை ஏந்திய வண்ணம் ஐந்தாறு சிப்பாய்கள் நின்றிருந்தனர்.

"நீங்கள் எங்கள் தளபதிக்குத் தர வேண்டிய கடனைத் தராததால் உங்களை அழைத்து வரச் சொன்னார்" என்றான் ஒரு சிப்பாய்.

"நான் யாரிடமும் கடன் வாங்கவில்லை" என்றாள் கமலம்.

''அதை அங்கு வந்து அவரிடம் சொல்லுங்கள்'' என்றான் அந்த முரட்டுச்சிப்பாய்.

"நான் வரவில்லை என்றால் என்ன செய்வீர்கள் ?"

''உங்களைக் கைது செய்து கொண்டுசெல்ல வேண்டிவரும்" என்றான் அவன்.

கமலத்தின் பெற்றோர்கள் சிப்பாய்களின் காலில் விழுந்து தன் மகளை விட்டுவிடுமாறு கெஞ்சினார்கள். கமலம் தன் பெற்றோர்களைச் சமாதானப்படுத்தினாள். தனக்கு எந்த ஆபத்தும் வராது. பயப்படவேண்டாம் என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்று அப்பாவின் குறுவாளை இடுப்பில் சொருகிக்கொண்டு புறப்பட்டாள்.

''வாருங்கள்'' என்று சிப்பாய்களின் முன்னால் நடந்தாள் கமலம். "நீங்கள் பல்லக்கில் வரலாம்" என்று சொன்னான் ஒரு சிப்பாய். கமலம் பல்லக்கில் ஏறிக்கொண்டாள்.

ஊருக்கு வெளியில் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திற்கு எதிரில் பல்லக்கை இறக்கினார்கள்.

அந்தப் பெரிய கூடாரத்தை அடுத்து நிறைய சின்னச் சின்னக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கமலத்திற்கு மனசு 'திடுக்', 'திடுக்' என்று அடித்துக்கொண்டது. தனக்கு ஏதாவது அவமானம் நேரிட்டால் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ள குறுவாள் தயாராக இருக்கிறதா என்று ஒருமுறை இடுப்பைத் தடவிப் பார்த்தாள்.



''தளபதியின் மனங்கோணாமல் நடந்து கொண்டால் உங்களுக்கு நல்ல வாழ்க்கையும் வசதியும் கிடைக்கும்'' என்றான் ஒருவன்.

அவனைத் திரும்பி ஒரு முறை முறைத்துவிட்டுத் திரும்பினாள். தன்னைச் சூழ்ந்திருக்கும் ஆபத்து அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

கூடாரத்தின் உள்ளே நுழைந்தாள். சற்று தூரம் நடந்த அவள் திரும்பிப் பார்த்தாள். உடன் வந்த சிப்பாய்கள் ஒருவரையும் காணவில்லை.

சற்றுத்தொலைவில் தளபதி கம்பீரமாக அமர்ந்திருந்தான். அவன் முதுகுப்புறம் மட்டும்தான் தெரிந்தது.

இதுதான் சரியான சமயம். தனது இடுப்பில் இருந்த உடைவாளை உருவினாள்.

தளபதி இடி இடியெனச் சிரித்தான்.

"இந்தக் குறுவாளைக் கொண்டு தளபதியைக் கொல்ல முடியுமா?" மீண்டும் சிரித்தான்.

"பெண்ணே, என் கடனைக் கொடுத்துவிட்டு நீ செல்லலாம். ஆனால் என் கடனைக் கொடுக்காமல் நீ தப்பிக்க முடியாது..." என்றான்.

"நான் உனக்குக் கடன் கொடுக்க வேண்டுமா?...என்ன உளறுகிறாய்?" கோபமாகக் கேட்டாள் கமலம்.

"பெண்ணே, இந்த நாட்டின் தளபதியிடம் பேசுகிறாய் நீ, மரியாதையாகப் பேசு" என்றான்.

"நீ யாராயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை" எனக் உரக்கக் கத்தியபடி தனது குறுவாளுடன் அவன் மீது பாய்ந்தாள்.

சட்டென்று அவள் கைகளை இறுக்கிப் பிடித்தான். முதன் முதலாகக் கூர்ந்து அவன் முகத்தைப்பார்த்தாள். எங்கோ பார்த்த முகம். அவள் திகைத்து நின்றாள்.

தளபதி உடைக்குள் தன் கணவன் சின்னத்தம்பி. அவளுக்குச் சந்தோஷம் உடம்பெல்லாம் பரவியது. அப்படி என்றால் தன் கணவன் தளபதி!

சிங்காரமும் முன்னாள் தளபதி ரகுபதியும் சேர்ந்து செய்த தேசத்துரோகத்தைத் தான் கண்டுபிடித்தது பற்றியும், தன்னை அரசன் தளபதியாக நியமித்தது பற்றியும் கூறினான். சிப்பாய் சிங்காரமும், தளபதி ரகுபதியும் குடும்பத்துடன் நாடுகடத்தப்பட்ட செய்தியையும் கூறினான்.

கமலம் என்ன சொல்வதென்று புரியாமல் தடுமாறினாள்.

"தவறான வழி சிங்காரத்திற்கு என்ன பரிசு கொடுத்தது? நேர்மையான வழி எனக்குக் கொடுத்த பரிசு என்ன? இப்போதாவது உனக்குப் புரிகிறதா?" என்று கேட்டான் சின்னத்தம்பி.

கமலம் தன்னை மன்னிக்குமாறு வேண்டினாள். அவள் கண்களில் சந்தோஷத்தில் கண்ணீர் வழிந்தது.

"அதோ பார்" என்றான் சின்னத்தம்பி. அவன் காட்டிய திசையில் அவள் குழந்தைகள் இரண்டும் அவளை நோக்கி "அம்மா" என்று ஓடி வந்தன.

*- "காற்று சிரித்தது" சிறுவர்களுக்கான மதிப்புணர்வுக் கதைகள் தொகுப்பிலிருந்து...*

*வெளியீடு : சிடா அறக்கட்டளை*
*98ஏ, கூட்டுறவு நகர், திண்டுக்கல்-624 004.*


# தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம்

TNCPC ★ MADURAI REGD. 145/92

நவஜீவன் மேன்ஷன், எஸ்.எஸ்.காலனி, மதுரை-10.
பதிவு எண்.145/92

**வாழ்த்து**

தங்கத் தமிழகத்தின் அங்கமெனத் திகழும்
சங்கத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில்
மங்காப் புகழோடும் மத்திய மாநில
அரசுகளின் ஆதரவோடும் பொதுமக்களின்
குறைகளைத் தொண்டுள்ளம் கொண்டு தீர்த்துவரும்
தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம்!

சரித்திரம் படைத்துவரும் முதல்வர் கலைஞரின்
எண்ணப் பூங்காவில் இலக்கிய மணத்தோடு
பூத்துக் குலுங்கும் 'தமிழரசு'
சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.

இவண்
**எஸ். லோககுரு,**

தலைவர், தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம்,
உறுப்பினர், அரசு மாவட்ட நுகர்வோர் குழு,
உறுப்பினர், அரசு மாவட்ட மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
உறுப்பினர், இரயில்வே பயணிகள் ஆலோசனைக் குழு.

# நேசம்



எங்களோடு கூடவே
வாழ்ந்தது -
இதற்கு முன்னும் நெடுநாள்
இருந்திருக்கவேண்டும் -
முகட்டு வளையைத் தாண்டி
கீழே இறங்கி வந்து
ஒருநாளும் பார்த்ததில்லை -
உணவுக்காக அங்குமிங்கும்
அலையத் தெரியாத
சோம்பேறிப் பல்லி -
அது அழகானது -
ஒட்டடை அடிக்கும்போது
அம்மா எச்சரிக்கையாய்க்
காவல் காப்பாள்
குலதெய்வம் போல -
அப்பாவிற்கும் எனக்கும்
அடிக்கடி நடக்கும்
சண்டையைக் கண்டு
வருந்துவது போல
வால்மட்டும் துடியாய்த்துடிக்கும் -
தாத்தா செத்த அதிகாலை
ஊரேகூடி அழுதபோது
அதன் கண்களிலும்
கலக்கம் தெரிந்தது -
சொந்த வீட்டிற்குக்
குடிபோன போது எல்லோர்க்கும்
சற்றே அழுகை வந்தது:
“வருகிறவர்கள்
அதன்
நேசம் தெரிந்தவர்களாய்
இருக்கவேண்டும்”

-நா. விச்வநாதன்

# வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவுச் சங்கம்

மேலூர், மதுரை மாவட்டம்.

*வேளாண் பெருமக்கள், வேளாண் பொறியியல் பணி கூட்டுறவுச் சங்கத்தில் இணைந்து வளர்ச்சியடைய வேண்டுகிறோம்.*

*எங்களது மையத்தின் மூலம் அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு 4 இஞ்சு, 6 இஞ்சு அளவுள்ள ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், இரும்புக் கதவுகள், கிராதிகள், ரோலிங் சட்டர், வேளாண்மைக் கருவிகள், மரத் தளவாட சாமான்கள் மற்றும் இரும்பு சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளும் தரமான முறையில் தயார் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*'தமிழரசு' சிறக்க வாழ்த்துகிறோம்.*



அன்புடன்

**அ.துரைராஜன்,**
தலைவர்.

*"வேலையில்லாக் கொடுமையால் தற்கொலை"*
*"கடன் தொல்லை தாளாமல் தற்கொலை"*
*"தாளாத வறுமையால் ஒரு குடும்பமே தற்கொலை"*
*"பரீட்சையில் தேறாததால் மாணவன் தற்கொலை"*

- தற்கொலை! தற்கொலை! மனிதனின் கோழை மனசு சாவைச் செயற்கையாக்கிவிட்டது. நாளுக்குநாள் தற்கொலைகள் அதிகரிக்கின்றன. ஊர்ந்து செல்லும் வாழ்க்கையில் ஒரு தடை ஏற்பட்டாலும் மனம் நேரே தற்கொலையைத்தான் சந்திக்கிறது. சிலருக்கு 'இந்த வாழ்வுக்கு சாவு மேல்' என்ற பல்லவி ஈனக் குரலில் வெளிவருகிறது. தலை சுற்றுகிறது; மயக்கம் வருவது போல் தோன்றுகிறது. உடலும் வியர்க்கிறது. உணர்ச்சியின் பல்வேறு நாடி நரம்புகள் ஒய்ந்து போகின்றன. ஒரே சிந்தனை! தற்கொலை!

உலகத்திலேயே 'மகத்தான கோழை' எவனென்றால், தற்கொலை செய்து கொள்ள நினைப்பவன் தான்! அவன்

# கோழை!

**கவிஞர் கண்ணதாசன்**

உலகத்து வாழ்வுக்கே ஒருவழிதான் இருப்பதாக நினைக்கிறான். அதனால் அந்த வழி அடைபட்டுவிட்டது போல் தோன்றியதும் தற்கொலைக்குத் துணிகிறான். மறுநாளே உலகம் இருண்டிருப்பதாகவும் தான் வாழ்வதால் துயர்தான் அதிகமென்றும் முடிந்த முடிவாகத் தனக்குத்தானே ஒரு கணக்குப் போட்டுக் கொள்வதால்தான், மனிதனது கோழைத்தனம் தற்கொலை வரை வியாபிக்கிறது. 'அடுத்து வருவது அதுபோன்றே இருப்பதில்லை' என்பதை அவன் உணருவதில்லை.

சொல்லப் போனால் தொல்லைப்படுகிற ஒவ்வொருவனும் தான் மட்டுமே அந்தத் தொல்லையை அனுபவிப்பதாக நினைக்கிறான். அதனால்தான் 'இருந்தென்ன போயென்ன' மனோபாவம் ஏற்படுகிறது.

உலகம் தொல்லைகளின் கூடாரம்.

மனிதனுக்கு அதிலிருந்து தப்பவேண்டிய கடமை இருக்கிறது.

எல்லா மனிதனுக்கும் வரும். அது யாரையும் விடுவதில்லை. ஆரம்ப முதலே தொல்லைகள் ஏற்படாமல் ஒதுங்கிக் கொண்டு வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்பவர்கள்தான் கவலையற்ற மனிதர்களாக வாழ்கிறார்கள். பின்பு வரும் தொல்லைகளைத் திட மனதுகொண்டு சமாளிக்க வேண்டும். முக்கியமாக, எதையும் சாதாரணமாகக் கருதும் மனப்பக்குவம் வேண்டும்.

'மனசுதான் காரணம்' என்பார்கள் கிராமங்களில்; எதற்குமே மனம்தான் காரணம். தொல்லைகளின் அளவையும் நிலையையும் மனம் தான் கணக்கிடுகிறது. சிறியவற்றைப் பெரிதாக்குவதே மனம் என்னும் பூதக்கண்ணாடிதான். மனதைத் திருப்பிப் பிடித்தால் பெரியன யாவும் சிறியனவாகத் தோன்றுகின்றன.

நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தில்தான் ஒன்றின் பரிமாணம் அடங்கிக் கிடக்கிறது. நாம் 'ஐயோ!' என்றால், ஐயோதான்! நாம் 'கிடக்கிறது!' என்றால் கிடக்கிறதுதான்! பஞ்சு பாரமாவதும், பாரம் பஞ்சாவதும் நெஞ்சத்தின் அளவில்தான். ஞானிகளைக் 'கடந்தவர்கள்' என்று சொல்வது இதனால்தான். அவர்கள் இதயங்கடந்தவர்கள். எண்ணங்கள், தங்களை அடக்கியாளவிடாமல், தாங்கள் எண்ணங்களை அடக்கியாள்பவர்கள்! (நான் சொல்வது உண்மை ஞானிகள்!)

மனக்குரங்கு மனிதனைப் பிய்த்துப் போடவிடக் கூடாது. தோல்வியில் அதிர்ச்சி ஏற்படக்கூடாது. தலை பாரமாகத் தோன்றும்படி சிந்திக்கக்கூடாது. சிந்தித்தால் நெஞ்சு வெடித்துவிடும் போல் தோன்றும் சில காரியங்களை வாழ்க்கைக் கோட்டிலிருந்து வெகு தூரத்திற்கு அப்புறப்படுத்திவிட வேண்டும்.

'போனால் மயிர்போச்சு, போ!' என்றானே இரட்டையரில் ஒருவன். அவனது துணிவு வேண்டும். முதல் தேதி காரியம், இரண்டாந்தேதிக் கடமையைத் தடைப் படுத்தும்படி விடக்கூடாது.

'சென்றதினி மீளாது' என்று முடிவு கட்டி, 'சென்றதையே சிந்தை செய்து கொன்றழிக்கும் குழியில் வீழ்ந்து' குமையாமல், இன்று புதிதாய்ப் பிறந்தோம் என எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்று விளையாடி இன்புறுதல் வேண்டும்.

அச்சமும் பயங்கரமான எதிரி: அதுதான் தற்கொலையின் தாய். சாவைத் துச்சமாக மதிக்கும் துணிவு கொண்டால், வாழ்க்கை இனிக்கும்.

'காலா உனைச்சிறு புல்லென மிதிக்கிறேன், என் காலருகே வாடா! சற்றே மிதிக்கிறேன்!' என்றான் பாரதி. எல்லோரையும் தன் வசப்படுத்தி சாவினை காலால் மிதிக்கப் பார்க்கிறான். தன்னை அறிந்ததால் கவிஞனுக்குத் திமிர்! சாவு, அவனுக்குத் துச்சம்!

---

கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் 24.6.1997. அதன் நினைவாக அவரெழுதிய இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

**வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தில்**

**வர்த்தகங்களின் கேந்திரமான**

**ஈரோடு மாநகரில்**

**நான்காயிரம் சதுர அடி பரப்பளவில்**

**மிக பிரமாண்டமான**

# ஸ்ரீ வேலன்ஸ்

# டிபார்ட்மெண்டல் ஸ்டோர்

*உரிமையாளர்* : **தாமரை மெகா ஸ்டோர்ஸ் (பி) லிட்.**
கால்நடை மருத்துவமனை ரோடு,
15, சென்ட்ரல் தியேட்டர் பில்டிங்,
ஈரோடு-1. தொலைபேசி : 252701, 257913

*வீட்டு உபயோகப் பொருட்கள், மளிகை பொருட்கள் மற்றும் கலை பொருட்கள் என எண்ணிலடங்கா உங்கள் தேவைக்கு இன்றே வருகை தாருங்கள்!*

தொல்லை அவனுக்குத் தூசு! 'ப்பூ! இதுதானே!' என்ற எக்காளம்! 'சனியனைத் தள்ளு!' என்ற அலட்சியம்! கால்கள் துடித்து நடக்கின்றன. நெஞ்சம் துள்ளுகிறது! முகத்திலே வெற்றியின் வெளிச்சம்; கூனிய உடலிலும் குறையாத அழகு! ஏன்? அவன் உலகத்தைப் பந்தாக நினைத்துவிட்டான். காலால் உதைக்கிறான். கையால் பிடித்து எறிகிறான்.

''பாரடா அந்தப் பாவி மகனை! நேற்று முதல் முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டிருக்கிறான். மடப்பயல்! முகஞ் சுருங்கினால் பிரச்சினைத் தீருமா? பட்டினி கிடப்பதால் மன பாரங் குறையுமா? டேய் ராசா! நிமிர்ந்து நடடா! ஏண்டா, 'ஙப் போல் வளைகிறாய்?'' இப்படிப் பாரதி பேசுகிறான். அவன் முழுசாகச் சிரிக்கிறான். உண்மையில் அதுதான் சிரிப்பு. வேண்டாதவர்களை வரவேற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது மனிதன் சிரிக்கிறானே, அது சிரிப்பல்ல; பிணத்தின் கோணிய இதழிலே தோன்றும் 'சிரிப்பு மாதிரி!'



மனந்திறந்து பேசு; சிரி: பயப்படாதே!

'நான்!' அனுபவமும் அறிவுமில்லாத வர்களுக்கு இந்த வார்த்தை அகங்காரம். பாரதி போன்ற கவிஞர்களுக்கு, இது தன்னை உணர்த்தும் சொல் - எல்லோர்க்கும் இந்த வார்த்தை பயத்தைப் போக்கும்!

*'புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்*
*தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும்*
*கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை என்னும்*
*வசை என்னால் கழிந்ததன்றே!'*

- என்றான் பாரதி. 'கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லை என்றார்கள்; இதோ! நான் வந்துவிட்டேன்!' என்று மார் தட்டுகிறான்.

இது தலைக்கனமல்ல. அகங்காரமல்ல; தன்னம்பிக்கை - இதுவே நன்னம்பிக்கை!

நம்பிக்கையில் வாழ முடியும்; சாவு ஓடும் - தற்கொலை நினைவு வராது.

தற்கொலை வரை துணியும் கோழைகள் தொலையட்டும். தினசரி சாகும் கோழைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள், பூபாளத்தில் முகாரியை இழைய விட்டுக்கொண்டே படுக்கையை விட்டு எழுகிறார்கள். அவர்கள் வாழ்வு பூராவும் முகாரியும், சகானாவும், நாதநாமக்கிரியையும் தான் பின்னணி இசை. எதிலும் பயம். எதிலும் ஐயம்! மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் ஓடிப்போய் வாழமாட்டோமா என்ற ஏக்கம். அடிவானத்துக்கு அப்பாலே சிந்தனை. பூனையைக் கண்டால் விலகி நடப்போர் புலியைக் கண்டால் என்ன ஆவார்கள்!

*'சிப்பாயைக் கண்டஞ்சுவார் - ஊர்ச்*
*சேவகன் வருதல்கண்டு பதை பதைப்பார்*
*அப்பால் எவனோ செல்வான் - அவன்*
*ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்!'*

- இவர்கள் ஏன் பிறந்தார்கள்? பிறந்த உயிரெலாம் அவர்கள் போலிருந்தால், வெற்றி எங்ஙனம் கிட்டும், உலகுக்கு?

*'மனதி லுறுதி வேண்டும்*
*வாக்கினிலே இனிமை வேண்டும்.'*

இதுவும் பாரதி சொன்னது!

அது வேண்டும்; இது வேண்டும்; ஆசைப்படு! அதை அடைய முயற்சி செய்! ஆசையை நீக்குவது பேதமை; அதனிலும் அதை அடையக் குறுக்கு வழி செல்வது பெரும் பேதமை - ஆசைப்படு! நேர்வழியில் அதைப் பெற்றுவிடு. கிடைக்கவில்லையேல் தளராதே! மீண்டும் ஏறு. முன்னேறு!

தளராதே! தளராதே! தளராதே!

அயோக்கியனெல்லாம், முதலாளியாக மாடிமேல் மாடி கட்டி மஞ்சத்திலிருந்து கொஞ்சிக் குலவுகிறான். நீ ஏன் நடுங்குகிறாய்? கால் கைகளை உதறி விட்டுக் கொண்டு நட!

பாரதி இதைத்தான் சொல்கிறான்.

புரட்சிக் கவிஞர் அதைத்தான் வலியுறுத்துகிறார்!

*'எடுத்த காரியம் யாவினும் வெற்றி!'*
*எண்ணும் எண்ணங்கள் யாவும் வெற்றி!'*

என எக்காளமிடும் நிலைக்கு வா!

உலகத்திலிருப்பவர்கள் எல்லாம் அசகாயசூரர்கள் மாதிரியும், நீ மட்டும் கையாலாகாதவன் மாதிரியும் ஏன் நினைத்துக் கொள்கிறாய்?

தவறே புரியாத மனிதர்கள்தான் உலகில் வாழ்வது போலவும், நீயே தவறு புரிந்துவிட்டதாகவும் ஏன் சஞ்சலப்படுகிறாய்?

*'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை*
*அம்மா பெரிதென் றகமகிழ்க!*
*பின் தொடர்க! வலிமை பெறுக!'*


தற்கொலைக்கு முயன்ற கிளைவ் மடிந்தே போயிருந்தானென்றால் இந்தியக் கண்டத்தில் இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயன் வாழ்ந்திருக்க முடியுமா? எண்ணிப்பார்!

இதுதான் இன்பப் பாதை அமைத்துத் தரும் வாழ்வு, சும்மா, இஞ்சி தின்ற குரங்கு மாதிரி முகஞ் சுளிப்பதில் பயனில்லை. ஒன்று நடந்துதான் தீருமென்னும் நிலையில் அதை நடக்கவிட்டு வேடிக்கைப் பார்ப்பதுதான் பக்குவப்பட்ட மனதுக்கு அடையாளம்.

மானம் - இது ஒன்றைத்தவிர, பாக்கி எதற்கும் பயப்படுவது பேதமை! தற்கொலை முழு மடைமை!

- 'கவிஞர் கண்ணதாசன் கட்டுரைகள்' தொகுப்பிலிருந்து, வெளியீடு : கண்ணதாசன் பதிப்பகம், 12, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை 17.


வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
மனம் வாடினார் வள்ளலார்!
குளிரால் வாடிய மயிலுக்குப்
போர்வை ஈந்தான் பேகன்!
முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி!
இன்று -



கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் சேர்ந்து பயனடைய வேண்டுகிறேன்.


எங்கள் சங்கத்தில் ரூ.9,300 வரை கடன் பெற்றவர்கள், வட்டியுடன் அசலில் பாதி மட்டும் கட்டினால், மீதமுள்ள 50% கடன் தள்ளுபடி செய்யப்படும்!

இச்சலுகை 30.6.97 வரை மட்டுமே சங்க உறுப்பினர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.



அன்புள்ள,

**அ. பழனிச்சாமி,** எம்.ஏ.,பி.எல்.,
தலைவர்
மதுரை வடக்கு வட்ட கூட்டுறவு
வீட்டு வசதி சங்கம்
206, கே.கே. நகர்,
மதுரை-625 020.



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் அரசு கிளை நூலகம் 1964 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இப்போது நூலகம் ஒரு மாடியில் செயல்பட்டு வருகின்றது. இது ஓட்டுக் கட்டிடம். நூலகத்தின் கீழ் ஒரு ஓட்டல் உள்ளது. நூலகத்தில் அமர்ந்து படிக்க முடியவில்லை. மேல் வெப்பம் தாக்குகின்றது. நூலகத்தின் கீழ் ஒரே புகை மண்டலம். நூலகத்தில் 1 மணி நேரம் கூட அமர்ந்து படிக்க முடியவில்லை. நூலகத்தில் பணிபுரியும் நூலகர் நூலகத்திற்கு 10 செண்ட் காலிமனை நிலம் வேண்டும் என ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் ஒன்றியக் குழு தலைவர் அவர்களிடமும், ஊர் பொது மக்களிடமும் விண்ணப்பம் வைத்துள்ளார். ஆனால் இன்று வரை எந்தவித நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. எங்கள் ஊரில் நூலகம் இருந்தும் எங்களால் முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. இந்த இடப் பிரச்சினையை அரசு தீர்த்து வைக்கமுடியுமா?

- வாசகர்கள் கூட்டம்
வேப்பந்தட்டை.

**தீர்வு:**

பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம், வேப்பந்தட்டை கிராமத்தில் உள்ள கிளை நூலகத்திற்குக் கட்டடம் கட்ட, காலிமனை பெற திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இரா.கண்ணன், எம்.ஏ.,பி.எட்.,
பொது நூலக இயக்குநர்
சென்னை.

**பிரச்சினை:**

பசும்பொன் மாவட்டம் நெற்குப்பை புதுஊரணிக் கரையில் நான்கு பிரிவுச்சாலை உள்ளது. இதை அடுத்து நல்லூரணிக் கரையில் உள்ள மெயின் ரோட்டில் மூன்று பிரிவுச்சாலை உள்ளது. இந்த இரு இடத்திலும் அடிக்கடி விபத்து நடப்பதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே கவனித்து வேகத்தடை போட ஏற்பாடு செய்யவேண்டும்.

கி. மனோகரன்
நெற்குப்பை.

**தீர்வு:**

இருசாலைகளிலும் போக்குவரத்து குறைவாக உள்ளதாலும் வாகனங்கள் மெதுவாகச் செல்வதாலும் பிரிவுச் சாலைகள் அருகில் பேருந்து நிறுத்தங்கள் இருப்பதாலும் காவல்துறை விசாரணையில் விபத்துக்கள் நடந்ததாகத் தெரியவில்லை. எனவே மனுதாரர் தெரிவித்துள்ள இடங்களில் வேகத் தடைகள் தேவையற்றது என அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்

**பிரச்சினை:**

நான் காரைக்குடி நகராட்சி அலுவலகத்தில், கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக வேலை பார்த்து வருகிறேன். மேலும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் எண் பெறப்பெற்று அப்போதைய நகர்மன்றத் தலைவர் திரு.சிதம்பரம் அவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இன்று வரை நிரந்தரம் செய்யாமல் உள்ளோம். மேலும் வேலைவாய்ப்பு அலுவலகம் வேறு வேலைக்கு எண் அனுப்ப மறுக்கிறது. அதனால் நாங்கள் தமிழகத்தில் 104 நகராட்சி அலுவலகங்களிலும் உள்ள தினக்கூலி பணியாளர்களும், எங்களுடைய குடும்பமும்



இதையே நம்பி உள்ளோம். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு எல்லா உதவியும் செய்துள்ளார். எங்களுடைய நியாயமான கோரிக்கை ஏற்று நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெ. திருமூர்த்தி
காரைக்குடி.

தீர்வு:

தற்பொழுதுள்ள அரசாணையின்படி 1.10.1979-க்கு முன்னர் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக (NMR) பணியாளர்களை நிரந்தரம் செய்துகொள்ளலாம். ஆனால் அதற்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்ட தற்காலிக (NMR) பணியாளர்கள் குறித்து அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சான்வத் ராம், இ.ஆ.ப.,
நகராட்சி நிர்வாக இயக்குநர்
சேப்பாக்கம், சென்னை.



பிரச்சினை:

1. பென்சன் பட்டுவாடா

அந்தந்தச் சமயங்களில் அனுமதிக்கப்படும் பென்சன்-பென்சனுடனான அலவன்சுகள் மிகவும் தாமதமாகப் பல மாதங்களுக்குப் பிறகு பட்டுவாடா செய்யப்படுகிறது. பென்சனர்கள் ஒரம் கட்டப்படுகிறார்கள். அரசு அறிக்கை வெளியானதும் சர்வீஸில் உள்ளவர்கட்குக் கிடைக்கும் போது மைய-மாநிலப் பென்சனர்களுக்கும் கிடைக்க வகை செய்யப்படவேண்டும்.

2. மைய-மாநில அரசுப் பணிகளில் மறுவேலை வாய்ப்பளிக்கப்பட்ட முன்னாள் படைமினர்களின் பென்சனுடனான அகவிலைப்படி பிடித்தம் செய்யப்படுகிறது. மாநில அரசுப்பணிகளில் உள்ளவர்களின் பென்சனுடனான அகவிலைப் படியைப் பிடித்தம் செய்வதைத் தவிர்த்து பென்சனுடன்ான அகவிலைப்படி அங்கீகரிக்க வேண்டும்.

3. மாநில அரசுப்பணியில் மறுவேலை வாய்ப்பளிக்கப்பட்ட முன்னாள் படைமினர்கள் அதே பணியிலிருந்து ரிட்டயரானபின் பென்சன் பெற்று வருகிறார்கள். இம்மாதிரியான பென்சனர்கட்கு மாநில அரசின் குடும்பப் பென்சன் கிடைக்க வகை செய்யவேண்டும். அதாவது இரண்டாவது சர்வீசுக்கும் குடும்பப் பென்சன் கிடைப்பதுதான் சரியான முறையாகும். இது தற்சமயம் நடைமுறையில் இல்லை.

4. இரண்டாவது உலக மகா யுத்தத்தில் கலந்துகொண்டவர்களின் உதவித்தொகை

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பங்கு கொண்டவர்கட்குத் தற்சமயம் உதவித்தொகையாக வழங்கப்படும் ரூ.150. பாகுபாடின்றி எல்லாருக்கும் வழங்க வகை செய்யப்பட வேண்டும். தற்சமயம் 5 வருட சர்வீஸ் பூர்த்தியானவர்கட்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் பணிபுரிந்த அனைவருக்குமே கிடைப்பதுதான் முறை, கர்நாடகத்தில் ரூ.500 வழங்கப்படுகிறது. இங்குக் கொடுக்கப்படுவது ரூ.150 தான், இந்தக் குறைந்த தொகையிலும் பாகுபாடு நீக்கப்பட வகை செய்யப்படவேண்டும்.

## WAR MEMORIAL

இங்கு சங்கரன்கோவிலில் கிளைக்கருவூல அலுவலக முன்பு புறம்போக்கு இடத்தில், முதலாவது, இரண்டாவது உலக மகாயுத்தத்தில் மற்றும் தேசம் சுதந்திரம் கிடைத்த பின்பும் நடந்த யுத்தங்களில் உயிர்த்தியாகம் செய்த படைமினர்களின் ஞாப கார்த்தமாக WAR MEMORIAL அமைக்க சங்கரன் கோவில் பஞ்சாயத்து யூனியனால் அனுமதிக்கப்பட்ட ஒரு செண்டு இடம் பலவருடங்களாகியும் இதுவரை தமிழக அரசு (ஒரு செண்டு) இடத்திற்கு பட்டா வழங்கவில்லை. அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஒரு செண்டு இடம் ஒதுக்கீடு செய்யவும் அரசு செலவில் யுத்த ஞாபகச் சின்னம் அமைத்துத்தரவும் தமிழக அரசை இச்சங்கம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட கோரிக்கைகள் கடந்த பல வருடங்களாக நிலுவையில் உள்ளது. ஆகவே மேற்கண்டவாறுள்ள கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து ஆவன செய்யப் பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.


- முன்னாள் இராணுவத்தினர் பென்சனர் சங்கம்
சங்கரன்கோவில்.

தீர்வு:

1. பணியில் இருப்பவர்களுக்கு அரசு ஆணை வெளியிடப்படும்போதே ஓய்வூதியம் பெறுவோருக்கும் வெளியிடப்படுகிறது. கருவூலம், அரசுடைமை யாக்கப்பட்ட வங்கி, பாதுகாப்புத்துறை ஓய்வூதியம்

வழங்கும் அலுவலகம், அஞ்சல் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் மூலமாக ஓரளவு தாமதமின்றிப் பட்டுவாடா செய்யப்படுகிறது.

2. புதுடில்லி கேந்திரிய சைனிக் போர்டு, பாதுகாப்புத்துறை அமைச்சுக் கடித எண்.2(2) பென்சன் கே.எஸ்.பி.எ நாள் 26.7.96 நாளிட்ட கடிதத்துடன் பெறப்பட்ட சுப்ரீம் கோர்ட் தீர்ப்பாணை பகுதியில், மைய மாநில அரசுப்பணிகளில் மறுவேலை வாய்ப்பளிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்களின் பென்சனுடனான அகவிலைப்படி பிடித்தம் செய்வது சரியானதே எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



3. முன்னாள் படைவீரர் நலத்துறை பொறுப்பு வகித்த மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 28.9.95 அன்று நடைபெற்ற தமிழ்நாடு முப்படை வீரர் வாரியக் கூட்டத்தில் இப்பொருள் தொடர்பாக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கிணங்க முன்னாள் படைவீரர்கள் பணியாற்றிய இராணுவப்பணிக் காலத்திற்கும், மறுவேலை வாய்ப்பில் பணியாற்றிய காலத்திற்கும் தனித் தனியே இரண்டு குடும்ப ஒய்வூதியங்கள் முன்னாள் படைவீரர்களின் விதவையர்க்கு வழங்க மத்திய அரசின் அனுமதி பெற புதுடில்லி மத்திய முப்படை வீரர் வாரிய இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண்.38098/95/மா2, நாள்:27.3.97 மூலமாக உரிய கருத்துரு அனுப்பப் பட்டுள்ளது.

4. தமிழ்நாடு முழுவதும் இரண்டாம் உலகப்போரில் பணியாற்றிய ஒய்வில் சென்ற முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் விதவையர் மொத்தம் 23,372 பேர் உள்ளனர் என்று கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இவர்களில் அநேகர் வறிய நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, இதர மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போன்று அவர்கட்டும் மாதந்தோறும் ரூ.300 வீதம் வழங்கும் பொருட்டு உரிய கருத்துரு அரசுக்கு இத்துறை மூலம் சமர்ப்பிக்கப் பட்டது. ஆனால் அரசு தனது கடித எண்.44152/ஏ/93-15 பொது (முன்னாள் படைவீரர்) துறை நாள்:11.1.95 மூலம் மேற்படி கருத்துரு நிதி நிலை காரணமாக உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும் எனத் தள்ளி வைக்கப்பட்டதாக (deferred for better times) தெரிவித்துள்ளார். ஆயினும், உலகப்போரில் குறைந்தது 5 ஆண்டுப் பணியாற்றி மறுவேலைவாய்ப்பு மூலம் ஒய்வூதியத் தகுதி பெறாத, தற்போது மாத வருமானம் ரூ.500க்கு குறைவாக உள்ள 5,906 பேருக்கு ரூ.1.13 கோடி செலவில் மாதம் ரூ.150 வீதம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கிட அரசு ஒப்புதல் அளித்து அது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சங்கரன் கோவில் போரில் உயிரிழந்த படைவீரர் ஒருவர் மட்டுமே. எனவே அங்கு போர் நினைவுச் சின்னம் எழுப்பத் தேவையில்லையென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- சி. காந்திமோகன் பாரதி
கூடுதல் இயக்குநர்
முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை.

**பிரச்சினை:**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா அரிமளம் ஊராட்சி ஒன்றியம் கே.புதுப்பட்டிக்கும், கீழாநிலை கோட்டைக்கும் மத்தியில் அறந்தாங்கி - காரைக்குடி செல்லும் பெரும் வழி மெயின் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டப்பட்ட மிக உயரமான பாலம் பழுதடைந்து மிக மோசமான நிலையில் உள்ளது. தற்போது மேற்கண்ட பாலம் பழுதடைந்து வருடா வருடம் பழுது நீக்கம் செய்து கொண்டு, பஸ் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

பாலம் மிகக் குறுகிய நிலையில் உள்ளதால், ஓட்டுனர்கள் மற்றும் பயணிகள் தங்களது உயிரை மறந்து பயணம் செய்ய வேண்டியுள்ளது. குறிப்பாக அப்பாலத்தில் மாதம் ஒரு விபத்து நடைபெற்று வருகிறது. எனவே தமிழக அரசு இப்பாலத்தை மாற்றி புதுக்கோட்டை அருகாமையிலுள்ள கடைக்குடி வெள்ளாறு பாலம் போல் அமைத்துத்தர வழிவகை செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

- மா.மு.கருப்பையா
முன்னாள் குளத்தூர் ஊராட்சி உபதலைவர்
மொட்டையாண்டி என்கிற தேசியமங்களம்
அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**தீர்வு:**

கே.புதுப்பட்டி-கீழாநிலை கோட்டைக்கு இடைப்பட்ட சாலைப்பகுதியில் கி.மீ.30/10ல் (புதுப்பட்டி-நெடுங்குடி சாலை) அமையப்பெற்றுள்ள பாலம் உடனடி சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பாலம் நல்ல நிலைக்கு மேம்பாடு

செய்வதற்கு 97-98 ஆண்டு "நபார்டு" மூன்றாம் கட்ட திட்டத்தில் மேம்பாடு செய்வதற்குப் பிரேரணை தலைமைப்பொறியாளர் (நெ.ஊ.ப) சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ஜே.கிறிஸ்டோபால்,
கோட்டப்பொறியாளர் (நெசிப)
புதுக்கோட்டை.

**பிரச்சினை:**

திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில், நிலக்கோட்டை வட்டத்தில் மாணவ மாணவிகளுக்கு படிக்க ஒரு கல்லூரி கிடையாது. கடந்த முப்பது ஆண்டுக் காலமாக, பிற்பட்ட மக்கள் வாழும் இப்பகுதி மக்கள் வெளியூர்களுக்குச் சென்றுதான் கல்லூரி படிப்பைத் தொடர வேண்டியுள்ளது. வசதி இல்லாதவர்கள் வெளியூர் சென்று படிக்க இயலாததால் இங்கு கல்லூரி படித்தவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. எங்கள் ஊரிலும் ஒரு கல்லூரி ஒன்று அமைத்து மாணவர்கள் படிக்க உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- சேவை ந. சிவசங்கரன்
நிலக்கோட்டை, திண்டுக்கல்.

**தீர்வு:**

நிலக்கோட்டையில் கல்லூரி அமைக்கும் செயல்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.


அரசின் நிதி நிலையின் காரணமாக, பொதுவாக, புதியதாக அரசு கலைக்கல்லூரிகள் (மகளிர் கல்லூரிகள் உள்பட) ஏதும் துவக்கப்படுவதில்லை. எனினும், அரசு நிதி உதவி பெறாத தனியார் கல்லூரிகள் சுயநிதி அடிப்படையில் துவங்க சில நிபந்தனைகளுடன் அரசு அனுமதிக்கின்றது. அவ்வாறான கருத்துரு ஏதும் அப்பகுதி கல்வி முகமையிடமிருந்து பெறப்படின் அது அரசு விதிகளின்படி பரிசீலிக்கப்பட்டு, அரசிற்குப் பரிந்துரைக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- க. இராமலிங்கம், இ.ஆ.ப.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்
சென்னை-6.

**பிரச்சினை:**

கோவை மாவட்டம், காங்கேயம் பேருந்து நிலையத்தில் திருச்சி-கோவை வண்டிகள் நிற் கின்றன. பயணிகள் விடுதிகளில் அருந்தி சற்று இளைப்பாறி, செல்கிறார்கள். அந்நேரங் களில் பயணிகளில் பேருந்து நிலையத்தின் உள்ளேயே சிறுநீர் கழித்து, அதனைச் சிறுநீர் நாற்றத்தின் மன்றமாக ஆக்கிவிடுகிறார்கள். பயணிகளைத் தூரத்தே சென்று சிறுநீர் கழிக்கும்படி நினைவூட்ட (மிரட்ட) ஓர் ஆளை இரவும் பகலுமாகப் போட்டிருந்தனர். இந்நாட்களில் அவ்வாளையும் காணோம். எனவே காங்கேயம் பேருந்துநிலையம் பயணிகளின் சிறுநீற்று வெள்ளத்தில் மிதந்து, அங்குச் செல்வோர்களின் மூக்கைத் துளைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் பலநோய்கள் பயணிகளிடமும், நாட்டின் பலவிடங்களிலும் பரவ வாய்ப்புண்டு. காங்கேயம் பேரூராட்சி ஓர் சிறிய இலவச சிறுநீர் கழிப்பகத்தைப் பேருந்து நிலையத்தில் கட்டிவைத்தால், அங்கு ஏற்பட்டு வரும் சுகாதார பாதகத்தை தடுத்து நிறுத்த முடியும். ஆவன செய்ய வேண்டுகிறேன்.'

- ச.இ.அருள்சாமி
நல்லாயன் கிறித்துவக் கல்லூரி
மைலேறி-பாளையம்
கோயமுத்தூர்.




**தீர்வு:**

காங்கேயம் பேரூராட்சியின் பேருந்து நிலையத்தில் கட்டண நவீன கழிப்பிடம் தண்ணீர் வசதியுடன் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் பெற்று அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் நவீன கழிப்பறையைப் பயன்படுத்தாமல் திறந்தவெளி இடங்களில் இரவு நேரங்களில் சிறுநீர் கழிக்கப் பயன்படுத்திவிடுகிறார்கள்.

பொதுமக்களின் நலன்கருதி பேருந்து நிலையத்தில் ஒரு சிறுநீர் கழிப்பிடம் அமைக்க தொகை ரூ.30,000க்கு மதிப்பீடு பெறப்பட்டு பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு விரைவில் இலவச சிறுநீர் கழிப்பிடம் அமைக்கப்படவுள்ளது என்ற விவரத்தையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

சு. குமாரசாமி
செயல் அலுவலர்
காங்கேயம் (தேர்வுநிலை பேரூராட்சி).

# பூம்புகார் துணியகம்

**LEADING SHOP**

**LATEST VARIETIES**

# POOMPUKAR TEXTILE

**55, Car Street,**
**Thiruvannamalai.**
**☎: 22520**

# SHABNAM READYMADE

**55, Car Street,**
**Thiruvannamalai.**
***Upstairs*: Best Ready Made Show Room**



'தொகுதிக்கு ஒரு நவீன கிராமம்' என்ற அடிப்படையில், தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டுள்ளதே 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'. இணையற்ற இத்திட்டத்தினுடைய நோக்கம் . சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவினர்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும், அடிப்படை கட்டுமான வசதிகள் ஆகியவற்றைப் பல்வேறு திட்டங்களில் இருந்து ஒருங்கிணைத்து, தேர்வு செய்யப்பட்ட குக்கிராமங்களில் செயல்படுத்தி, ஒவ்வொரு கிராமமும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குமாறு அமைத்திட வேண்டும் என்பதேயாகும்.

## தொகுதிக்கு ஒரு நவீன கிராமம்

# 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'

தொகுதிக்கு ஒரு நவீன கிராமத்தை உருவாக்கும் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - முதன்முதலாக - வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள, இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த பொன்னை கிராமத்தில், தொடங்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 26.6.97 அன்று துவக்கிவைத்த இத்திட்டத்திற்கான சீர்மிகு விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப.வி.ச. டேவிதார் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - ஓராண்டு செயல் திட்டம்' என்ற கையேடு ஒன்றை வெளியிட்டு முதல்வர் கலைஞர் அவர்களிடம் வழங்கிவிட்டு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி ஆகியோர் முன்னிலை உரைக்குப் பின், மாண்புமிகு மத்திய அரசின் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' பற்றி சிறப்புரையாற்றினார்.

### முதல்வர் பேருரை

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டித் துவக்கி வைத்து, 1047 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களிடையே அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

இந்தியாவிலேயே முதல் தடவையாக ஒரு புதிய திட்டத்தை தமிழகத்திலே 'அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமம்' என்ற பெயரால் இன்று நாம் தொடங்குகிறோம்.

இது பொன்னையில் தொடங்கப்படுகிறது என்றாலும், இதைச் சுற்றியுள்ள 22 குக்கிராமங்களும் பயன்படுகிற வகையில் தொடங்கப்படுகிற திட்டமாகும். 22 குக்கிராமங்கள் குழந்தைகளைப் போலவும், அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் பொன்னை அன்னையைப் போலவும் விளங்குவதை நான் அறிவேன், நீங்களும் அறிவீர்கள். அந்த அன்னை ஆரோக்கியமான உணவை



உண்டால் அந்தத் தாய்ப்பாலின் மூலம் குழந்தைகளும் வலிவு பெறும் என்பதற்கு ஒப்ப, பொன்னையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்து இதைச் சுற்றியிருக்கிற இருபத்தி இரண்டு குக்கிராமங்களும் பயன்பெறும் வகையில், அங்கே வாழ்கிற மக்கள் அடிப்படை வசதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெறும் வகையில், இந்த கிராமப் பகுதியை எல்லா வசதிகளும் நிறைந்த ஒரு பகுதியாக உருவாக்குகின்ற இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றது.

குடிநீர், நல்ல தெரு, இணைப்புச் சாலை, விளக்கு வசதி, சுகாதார மருத்துவ வசதி ஆகிய இத்தனை அடிப்படை வசதிகளையும் ஒன்றுவிடாமல், ஒன்றிரண்டு விட்டுப் போயிருந்தால் அதையும் செய்து முடிக்கின்ற வகையில் இந்தத் திட்டம் பலன்தர வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை.

**அதனால்தான் நிதிநிலை அறிக்கையில்-ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்த வாக்குறுதிகளில் ஒன்றான ஒரு தொகுதிக்கு ஒரு கிராமத்தைத் தத்தெடுத்துக் கொண்டு, அதை நவீன மயமாக்கி, அந்தத் திட்டத்தை "அண்ணா மறுமலர்ச்சி கிராமத்திட்டம்" என்ற நிலைமையிலே உருவாக்குவது என்பதைத் தமிழகத்திலே முதன்முதலாக - இந்தியத் திருநாட்டிலேயே முதன்முதலாகத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.**

## இந்தியாவின் முதுகெலும்பு

நாங்களெல்லாம் கிராமத்திலே பிறந்தவர்கள்தான். கிராம மக்களுடைய வாழ்வு வளமாக இருந்தால்தான் நகரங்கள் வாழமுடியும். கிராமங்கள்தான் இந்தியா வினுடைய முதுகெலும்பு அந்த முதுகெலும்பு வளைந்தால், ஒடிந்தால் எப்படி மனிதன் நிமிர்ந்து நடக்கமுடியாதோ எப்படி வாழவே முடியாதோ, அப்படிப்பட்ட நிலை நாட்டிற்கு ஏற்பட்டுவிடும். எனவேதான் அந்த முதுகெலும்பு வலுவாக இருக்கவேண்டும்- வளமாக இருக்கவேண்டும், ஆரோக்கியமாக இருக்கவேண்டும்-என்ற அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

ஒரு மரத்தை எடுத்துக் கொண்டால்கூட-அந்த மரமோ, செடியோ, கொடியோ அது வளர்வதாக இருந்தால், வேரில் தண்ணீர் ஊற்றவேண்டும். வேரில் ஊற்றுகின்ற தண்ணீர், அந்த வேர் மாத்திரம் அருந்துவதற்காக மட்டும் அல்ல; அந்த வேர் மாத்திரம் வளர்வதற்காக அல்ல. தண்ணீர் ஊற்ற, ஊற்ற, வேரும் வளர்ந்து அந்த வேர் வழியாக அந்தத் தண்ணீரின் சத்தும், நாம் இடுகின்ற உரத்தின் சத்தும், மரத்தின் அடிப்பாகத்திற்கும், கிளைகளுக்கும், கொப்புகளுக்கும், இலைகளுக்கும் செல்வதைப்போல-கிராமங்கள் என்கின்ற வேர்களுக்கு விடப்படுகின்ற தண்ணீராக, இடப்படுகிற உரமாக, எருவாகத்தான் கிராமப்புறங்களை முன்னேற்ற வேண்டும் என்ற அக்கறையோடு இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## கேள்விக்கு இடமில்லை

இன்றைக்கு இந்த பொன்னையையும், பொன்னையைச் சுற்றியுள்ள குக்கிராமங்களையும் சேர்த்து ஏறத்தாழ ஒரு கோடியே இருபத்தியொரு லட்ச ரூபாய்க்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, ஆரம்பமாக இருக்கின்றன.

ஏதோ அடிக்கல்லை நாட்டிவிட்டுப் போய்விடுவார்கள்; பிறகு இங்கே அந்தத் திட்டம் உருவாகுமா? உருவாகாதா? என்ற கேள்விக் குறிக்கு இடமேயில்லை. இன்று அடிக்கல்லை நாட்டிவிட்டுச் செல்கிற நான் சென்னை சென்றதும், வந்திருக்கிற அமைச்சர் களையெல்லாம் "அந்தத் திட்டங்கள் பொன்னையில் தொடங்கப்பட்டுவிட்டனவா?" என்று கேட்பேன். அமைச்சர்களிடமிருந்து பதில் வந்தாலும் கூட, நேரடியாகத் தொலைபேசி மூலமாக மாவட்ட ஆட்சித்தலைவரைத் தொடர்பு கொள்வேன். "அந்த அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்கள் என்ன ஆயிற்று? அடிக்கல் அடிக்கல்லாக இருக்கிறதா? திட்டங்கள் ஆரம்பமாகி விட்டதா?" என்று அப்படி நேரடியாகக் கேட்கக் கூடிய முதலமைச்சரைத்தான் நீங்கள் இன்று பெற்றிருக்கிறீர்கள்.

இதைத்தவிர, ஆயிரத்து நாற்பத்து ஏழு பேர் பயனாளிகளாக அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றை இன்றைக்குப் பெறுகின்றார்கள். அடையாளமாக ஒரு இருபத்தைந்து பேருக்கு நான் அதை வழங்கியிருக்கிறேன்.

**தொட்டில் முதல் இடுகாடு வரையில் தமிழகத்திலே பிறக்கின்ற ஒரு குழந்தை வாழ்ந்து கடைசியாக, கண்மூடிச் செல்கிற வரை-கல்லறைக்குச்செல்கிற வரை-கல்லறைக்குச் சென்றாலும்கூட அந்தக் குடும்பத்திற்கு வேறு ஆதரவு இல்லாவிட்டால், அந்தக் குடும்பத்திற்கும் நிதி உதவி செய்கிற ஒரே அரசாகத் தமிழக அரசு இருக்கிறது.**

**இவைகளெல்லாம் போதுமான நிம்மதியை எனக்கு அளிக்கவில்லை. இன்னும் மேலும் மேலும் உங்களுக்குச் செய்ய வேண்டும் என்ற ஆசை, ஆர்வம், அந்தத் துடிப்பு என் இதயத்தில் என்றும் இருக்கிறது.**

## இந்தக் கண்கள்!

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது-என் கண்ணால் கண்ட காட்சி. என்னுடைய தந்தை முத்துவேலர், என்னுடைய தாய் அஞ்சுகத்தம்மையார் இருவரும், என் வீட்டைச் சுற்றியிருக்கிற கோயில்

*"நாங்களெல்லாம் கிராமங்களிலே பிறந்தவர்கள்தான்; எனவே, கிராம மக்களிடத்திலே எந்த அளவிற்கு அன்பும் பாசமும் கொண்டிருப்போம் என்பதை நீங்களெல்லாம் தெரிந்து கொள்ளலாம். கிராமங்களையெல்லாம் நகரங்களாக்க வேண்டும் என்பதுதான் எமது திட்டம். இன்றைக்கு நான் நகரவாசியாக இருந்தாலும்கூட எல்லோருக்கும் பொதுவானவன்."*



குத்தகை நிலத்தில் - வயல் வெளியில், உழுததை, நடவு நட்டதை, மற்ற விவசாயத் தொழிலாளர்களோடு சேர்ந்து அறுவடை செய்ததைக் கண்ட கண்கள்தான் என்னுடைய இந்தக் கண்கள்.

எனவேதான், என்னுடைய தந்தையும், தாயும் எப்படி உழைத்தார்களோ அப்படித்தான் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புறத்து மக்கள் உழைக்கிறார்கள். அதனால்தான் நகர்ப்புறங்கள் வாழ்கின்றன. கிராமங்கள் உழைத்து நகரங்கள் வாழ்ந்து நாடும் வளம் பெறுவதற்கு அடிப்படை கிராமப்புற மக்கள்தான்.

எனவே, அந்த கிராமத்து மக்களுக்கு நன்றி காட்ட வேண்டியது-அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்வது என்னுடைய கடமை. இந்த ஆட்சியின் கடமை என்பதை உணர்ந்துதான் இன்றைக்கு இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம்.

### ஒரு கோடியே 21 இலட்சம் ரூபாய்

முதலில் கூறியபடி, ஒரு கோடியே இருபத்தியொரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய்க்கான திட்டங்கள் இங்கே நிறைவேற்றப்படவிருக்கின்றன. பொன்னை கிராமத்திற்குத் தடையில்லாமல் இருபத்து நான்கு மணி நேரமும் குடிநீர் வசதி கிடைத்திட ஆறு லட்சம் ரூபாய் செலவில் தனிக் குழாய்ப்பாதை அமைக்கப்பட உள்ளது. ஒட்டனேரி, எஸ்.என்.பாளையம் ஆகியவற்றிற்கு உள்ள குடிநீர்க் குழாய்களுக்குக் கூடுதல் இணைப்பு வழங்கிட பதினைந்து லட்சம் ரூபாய் செலவில் ஒரு கூடுதல் மேல்நிலை தண்ணீர்த்தொட்டி கட்டப்பட உள்ளது.

தற்போது உள்ள குடிநீர்க் குழாய்கள் மூன்று லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட உள்ளன. பி.என்.பாளையத்திற்கு மேல்நிலை குடிநீர்த் தொட்டியிலிருந்து எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் புதிய இணைப்பு வழங்கப்பட உள்ளது. எஸ்.என்.பாளையம், ஒட்டர் காலனி ஆகியவைகளுக்குப் புதிதாகக் குடிநீர் வசதி, ஐந்து லட்சத்து எண்பதாயிரம் ரூபாய் செலவில் செய்து தரப்பட இருக்கிறது. முத்தியால் பள்ளி பகுதிக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில், குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட உள்ளது.

கொண்டாரெட்டிப் பள்ளி பகுதிக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்படவிருக்கிறது. தேவகன்னிகாபுரம் பகுதிக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட உள்ளது. பொன்னை கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. அங்குள்ள தொடக்கப் பள்ளிக்கு மூன்று லட்ச ரூபாய் செலவில், கூடுதல் கட்டிட வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

### பள்ளிகளுக்குக் குடிநீர்

பொன்னை கிராமத்தில் உள்ள மூன்று தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் வசதி செய்து தரப்பட உள்ளது. பள்ளிக்கு ஒன்று வீதம் மூன்று பள்ளிகளுக்கும் முப்பதாயிரம் ரூபாய் செலவில் மூன்று கழிப்பிடங்கள் கட்டித்தரப்படவுள்ளன. மொத்தம் இருபத்து எட்டு லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் தொகுப்பு வீடுகள் அறுபது; இந்த அறுபது வீடுகளில் ஒட்டநேரியில் இருபது வீடுகளும், பி.என்.பாளையத்தில் இருபது வீடுகளும், பொன்னைபுதூரில் இருபது வீடுகளும் கட்டப்படும்.

**முதன் முதலாக 1976-ஆம் ஆண்டுக்கு முன்பு நான் முதல்வராக வந்தபோது, இந்தியாவிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டம்.**

**இதைப் பார்த்து, பிறகு மத்தியில் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தை இந்தியா முழுதும் ஆரம்பிக்க வேண்டும்**

> ‘தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லுவதுண்டு; ஆனால் இந்த ஆட்சியில் தட்டாமலே திறக்கப்படும்; கேட்காமலே கொடுக்கப்படும். இருந்தாலும்கூட உங்கள் மனதிலே இருப்பதை சொல்லுங்கள். அரசு அதிகாரிகள், பிரதிநிதிகள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், உள்ளாட்சியில் உள்ள பிரதிநிதிகள் அனைவரும் அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம்!’

**என்று ஆரம்பித்து, அந்தத் திட்டத்திற்கு இந்திரா காந்தி அவர்கள் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது கருணாநிதி ஆரம்பித்த திட்டமானாலும் இன்றைக்கு இந்திராகாந்தி பெயரால் அந்தத் திட்டம் தமிழகத்திலும் இந்தியாவில் பல மாநிலங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

அந்தத் திட்டத்தின்படி ஒட்டனேரியில் இருபது வீடுகள் பி.என்.பாளையத்தில் இருபது வீடுகள், பொன்னப்புதூரில் இருபது வீடுகள், இஃதன்னியில் புதுப்பித்துக் கட்டப்பட உள்ள வீடுகள் நாற்பது. இந்த நாற்பது வீடுகளில் பொன்னை காலனியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வதற்காக இருபது வீடுகள் குறவர் காலனியில் அவர்கள் வாழ இருபது வீடுகளும் புதுப்பித்துத்தரப்படும். மேலும் இருபது வீடுகள் பழுது பார்க்கப்பட இருக்கின்றன.

ஒட்டனேரியில் நியாய விலைக்கடைக்கு கட்டிடம் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ளது. பேருந்து நிலையம் ஒன்று ஐந்து லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட உள்ளது.

### நியாயவிலைக் கடை

வடார்க்காடு அம்பேத்கர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று புதிதாகத் தொடங்கப்படுகிறது. முழுநேர நியாய விலைக்கடை ஒன்று பொன்னை பெரிய கோயில் தெருவில் புதிதாகத் தொடங்கப்படுகிறது.

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சர்வோதய சங்கத்தின் உதவியுடன் மகளிர் குழுவிற்கு நூல் நூற்கும் கருவிகள் வழங்கப்படுகின்றன. இது தவிர, ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு தென்னங்கன்றுகளும், இரண்டு பப்பாளி கன்றுகளும், ஒரு முருங்கைக் கன்றும், ஒரு கொய்யாக் கன்றும் வழங்கப்படுகின்றன. இதுபோல் மொத்தம் ஆயிரம் வீடுகளுக்கு இந்தக் கன்றுகள் வழங்கப் படுகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ஐம்பத்தியொரு பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட உள்ளன.

ட்ரைசம் திட்டத்தின் கீழ் இருபது பயனாளிகள் உதவி பெறுகிறார்கள். நிலமற்ற ஏழைகளுக்கு 2.45 ஏக்கர் நிலம் வழங்கப்படுகிறது. இவைகளெல்லாம் ஒரு முழுமையான, நவீனமயமான அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தை அமைப்பதற்கு-உருவாக்குவதற்கு இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளாகும்.

### இரத்த நாளங்கள்

இவைகளையெல்லாம் நிறைவேற்றினால்கூட, மேலும் சில தேவைகள் உங்களுக்கு இருக்கும். அந்தத் தேவைகளை உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் தம்பி காந்தி வழியாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர் அருமை நண்பர் வேலு அவர்கள் மூலமாகவோ, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் வீராசாமி, தம்பி துரைமுருகன் இவர்கள் மூலமாகவோ - இயலாவிட்டால் நேரடியாக என்னிடமோ அவைகளைச் சொல்லி அவைகளையெல்லாம் நீங்கள் நிறைவு செய்து கொள்ள முடியும் என்ற உறுதியையும் இந்த மாபெரும் விழாவில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு என்றார் உத்தமர் காந்தியடிகள். நான் சொல்கிறேன்-கிராமங்கள் தான் தமிழ்நாட்டின் இரத்த நாளங்கள். எனவே, அந்த ரத்தநாளங்கள் சுத்தமாக இருக்கவேண்டும். இரத்த நாளங்களில் இரத்த ஓட்டம் ஒழுங்காக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் இதயம் வேலை செய்யும் தமிழகம் வாழும். அப்படி தமிழகத்தை வாழவைக்கும் அனைவரும் எனக்கு ஆதரவு தாருங்கள் - இந்த அரசுக்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்டு - அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமத்தைத் தொடங்கி வைக்கின்றேன்.”**

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில்-மாவட்டக் கூடுதல் ஆட்சியர் திரு.ரவிதியாகு நன்றி கூறினார். □

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வெ. இறையன்பு**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

# "சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்!"

**வ**டஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் பொன்னை கிராமத்தில், 26.6.97இல், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொகுதிக்கு ஒரு நவீன கிராமம் காணும் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்ட' த்தைத் துவக்கிவைத்தார். அவ்விழாவில் பங்கேற்ற ஏனையோர் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து...

★ "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம், இந்த ஓராண்டில்-இந்த பொன்னை கிராமத்தில் - உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, காவல்துறை, சமூக நலத்துறை, போக்குவரத்துத்துறை, மின்துறை போன்ற இருபத்திரண்டு துறைகள் முழுமூச்சோடு ஈடுபட்டு, பல நலத்திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது. தமிழகத்திலேயே முதன்முதல் இதற்காக இக்கிராமத்தைத் தேர்ந்தெடுத்ததற்காக, மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்".


- திரு. ப.வி.ச.டேவிதார்
மாவட்ட ஆட்சித்தலைவர்

★ "இந்த அரசு மலர்ந்த பின்புதான், இந்த பொன்னை கிராமத்திற்கும் மற்ற கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளே போடப்பட்டன. வேறுயாருமே இந்தக் கிராமத்தைத் திரும்பிப் பார்த்ததில்லை; இத்திட்டம் நிறைவேற்றப்பட இது மிகவும் பொருத்தமான கிராமம் - இங்கே இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் - பொன்னை கிராமத்தை மட்டுமல்ல; என்னுடைய இந்தத் தொகுதியையே நவீனமயமாக்கிவிடும் தமிழக அரசு என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு!"

- திரு. ஆர்.காந்தி, எம்.எல்.ஏ.,

★ "தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளில், எங்களுடைய தொகுதியில் உள்ள பொன்னை கிராமத்தைத் தேர்ந்தெடுத்து 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை' துவக்கிவைக்கும் அரசுக்கு, இப்பகுதி மக்கள் சார்பிலும், எங்கள் கட்சிசார்பிலும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம், இதைச்சுற்றியுள்ள கிராமங்கள்-கிராம மக்களெல்லாம் பெரிதும் பலன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்!"

- திரு. ஏ.எம்.வேலு எம்.பி.,



★ "மூன்று குடிநீர்த் தொட்டிகள் மட்டுமே இருந்த இந்தக் கிராமத்தில், மக்கள் நலன் கருதி பதின்மூன்று குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில், இந்த நான்காண்டுகளில் குடிநீர் வசதியில்லாத கிராமமே இருக்கக்கூடாது என்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்; அதை முழுமூச்சோடு நின்று செயல்படுத்துவோம். இதேபோல் தமிழ்நாட்டில் இன்னும் 233 கிராமங்கள் இந்த "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பலன் பெறவிருக்கின்றன".

- திரு. கோ.சி.மணி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

★ "எந்த ஒரு திட்டமானாலும் அதன்பலன் கிராம மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும் என்று கருதுபவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். 'முடியாததையெல்லாம் முடியும்' என்று காட்டிவரும் அவர்மூலம்-அந்த அடிப்படையில் தீட்டப்பட்ட திட்டம்தான் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'. ஆந்திர மாநில எல்லையிலே உள்ள பொன்னை கிராமத்தில் 1972இல், ஆற்றுப்பாலம் கட்ட அடிக்கல் நாட்டியவர் நமது முதல்வர்தான். இதை எடுத்துக்காட்டுக் கிராமம் ஆக்க முன்வந்துள்ள நமது முதல்வர் அவர்கள்-விரைவில் இந்த மாநிலத்தையே மாதிரி மாநிலமாக ஆக்கிக் காட்டுவார்!"

- திரு. துரைமுருகன்
(பொதுப்பணித்துறை அமைச்சர்)

★ "இந்த வட்டார மக்களெல்லாம் நலம் பெறவேண்டி, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்த ஆணையிட்டிருக்கிறார் நமது முதல்வர் அவர்கள்; அதுமட்டுமல்ல-இன்னும் பல மக்கள் நலத்திட்டங்கள் மூலம் பொன்னை கிராமத்தைச் சுற்றிலுமுள்ள 22 கிராமங்கள் இந்த ஆண்டுக்குள்ளேயே எல்லா வகையிலும் வளர்ச்சி பெறவிருக்கின்றன. அதுதான் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கம்".

-திரு. ஆர்க்காடு நா. வீராசாமி
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

★ "இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடிசை மாற்று வாரியத்தை அமைத்ததும், கைரிக்ஷாவை மாற்றி முதன்முதல் சைக்கிள் ரிக்ஷா வழங்கியதும், அரசுப் பணியில் இருப்போர் இறந்தால் அரசு மூலம் தரப்படும் தொகையை முதன்முதல் ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியதும், ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு முதன்முதல் வீடு கட்டித்தந்ததும், முதன்முதல் பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டத்தை அமல்படுத்தியதும், முதன்முதல் மனுநீதித்திட்டத்தைக் கொண்டுவந்ததும், முதல்முதல் சீரணித்திட்டத்தை அறிமுகப் படுத்தியதும் - நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல், இந்தியாவிலேயே முதன்முதலாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும் துவக்கி வைக்கப்படுகிறது; கிராமங்களின் நிலையை நகரங்களின் நிலைக்கு உயர்த்தவேண்டும் என்பதே இத்திட்டம். 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' என்ற வகையில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படும்"




- திரு. முரசொலி மாறன்
(மத்திய தொழில்துறை அமைச்சர்)

(தொகுப்பு : பி.எல்.ஆர்.)

J.B.A & CO

T.V.MALAI

# Dealers in Broken Glasses

---

## J.BASHEER AHAMED & CO.,

M.E.JAMALUDEEN

MANAGING PARTNER

56-D Mogalpura Street,

Tiruvannamalai-606 601.

Ph.22450 - 22350 - 22556

Res.22791 Fax.04175-23350


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வர்ன்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

